www.padippakam.com

# கற்பகம்

**KATPAHAM**

**NR. 2** **01 - 11 - 1994** **இதழ் 2**



தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம்

Tamilsk - Dansk Venskabsforening

படிப்பகம்

www.padippakam.com

**KATPAHAM**
**ISSN 0909-9697**
**udgiver**
**TAMILSK-DANSK**
**VENSKABS FORENING**
**Redaktion:**
**Troels Johansen (Ansv.)**
**Redaktionhjælp**
**M. S. Kandasamy**
**David George**
**T.Kugan**
**N. Mahendran**
**M. Shan**
**T. Selvakumar**
**Sats og Lay- out**
**Navalan Pathipphakam**

## கற்பகம்

வெளியிடுபவர்கள்:
தமிழ் – டெனிஸ்
தோழமை ஒன்றியம்

பத்திரிகைப் பொறுப்பாளர்:
ற்றோல்ஸ் ஜோகன்சன்

உதவியாளர்கள்:
எம். எஸ். கந்தசாமி
டேவிட் ஜோர்ஜ்
என். மகேந்திரன்
ரி. குகன்
எம். சண்
து. செல்வக்குமார்

கணணித்தொகுப்பு – வடிவமைப்பு
நாவலன் பதிப்பகம்

## Inhold
## உள்ளடக்கம்

**Rigdom og Fattigdom...**
செல்வமும் வறுமையும்...

**Etnisk Ligestilling...**
சகல இன மக்களுக்கான...

**Tilbud...**
இன பாகுபாடு...

**Den Hemlige Vej...**

புதிய நம்பிக்கை...?
கற்பகம்...
கல் தோன்றி மண் தோன்றா...
ஏழரை...!
அருவுருவம்...
டென்மார்க்கில் அரசியல்...
அன்புப் பாதை...
தமிழாராய்ச்சி மாநாடு...
தமிழர் நிலை கண்டு...
இந்து கலாச்சார தகவல்...
கத்தோலிக்க ஒன்றியம்.....
**Jule Fest..** ஒளி விழா...
பேச்சுத்திறன் முடிவுகள்...
பிறந்த நாள் வாழ்த்துக்கள்...

# RIGDOM og FATTIGDOM - HVAD ER DET, VI TALER OM?

**"Danmark er et rigt land og et godt land at leve i" - denne sætning hører vi mange gange.**
**Og det er sandt nok.**
**For når man ser sig om, er der mange tegn på materiel velstand.**
**Der er smukke huse, gode veje, transportmuligheder; her er rent og pænt.**
**Næsten alle har et rimelig godt sted at bo; der er elektricitet, varme og vand nok året rundt.**
**De fleste mennesker i Danmark har TV, vaskemaskine, telefon, bil, m.v. Vi får også allesammen al den mad, vi kan spise.**
**Vore børn bliver passet i dagpleje eller daginstitutioner, mens vi voksne er på arbejde, og der er boliger eller plejehjem for vore ældre.**
**Hvis vi bliver syge, kan vi gratis komme på sygehuset, ligesom det ikke koster noget at modtage undervisning, uanset om det er i børneskolen eller på et universitet.**
**I Danmark har man et socialt sikkerhedsnet, som fanger os op, hvis vi kommer ud for situationer, som kan true vores eksistens.**
**De fleste betaler skat - og selv om beskatningen er hård, har vi allesammen nok tilbage.**
**Vi kalder vores samfundsform "demokratri". Det er en måde at indrette sig på, hvor alle har rettigheder og pligter; hvor man kan udtale sig og mødes uden frygt for overgreb eller arrestation.**

**Danmark er altså et rigt og godt land at leve i!**

**Jeg er lige kommet hjem fra et arbejdsophold i Albanien - måske Europas fattigste land. Et tidligere diktatur gennem 50 år, hvor al opposition blev slået ned, hvor ingen meninger imod styret måtte komme frem, hvor fattigdom og elendighed er synlig overalt. Penge har befolkningen næsten ingen af, men de mangler de mest basale ting i hverdagen. Nu kan de ytre sig uden frygt, men de mangler arbejde, et sted at bo, tøj - de mest nødvendige ting. Alligevel er albanerne nogle af de mest gæstfrie og venlige mennesker, jeg har mødt.**

Det giver stof til eftertanke. For mange danskere er ikke særlig gæstfrie eller hjælpsomme. Misundelse og fordomme er ikke ualmindelig til trods for, at vi har mere, end vi kan bruge.

Jeg tror, at vi skal stoppe op og tænke os godt om i vores del af verden. Vi må vurdere, om vi taber for mange følelser, værdier og traditioner i denne jagt på materiel velstand. Vi må ikke blive effektive materielle lykkejægere, samlere af ting og sager. Derved skaber vi os bare bekymringer.

Rigdom har ikke nødvendigvis noget med omfanget eller antallet af materielle goder at gøre.
Rigdom har noget at gøre med menneskelige relationer, med familier og venskaber. Penge kan ikke erstatte ensomhed; bil og TV hjælper ikke på manglende selvværd eller menneskelige savn. Det er vigtigt at holde fast ved de menneskelige kontakter og ved sin kultur; det er nødvendigt at huske sine sange, danse, litteraturen og myterne; sproget og at have nogen at tale med. Det betyder rigdom.

De ting, jeg har omtalt, gælder ikke alene for danskere. De er lige så betydningsfulde for flygtninge, som hurtigt kan vænne sig til "det søde, materielle liv".

En dansker kan lære meget i det fattige Albanien.
En dansker kan lære meget af en flygtning fra et eller andet land.
Men en flygtning i et rigt land kan også lære meget, bl.a. om hvad man ikke skal gøre.

Troels Johansen.

# எங்களால் பேசப்படும் செல்வம், வறுமை என்பது என்ன ?

**"டென்மார்க் செல்வமான, வசிப்பதற்கு சிறந்த ஒரு நாடு"** என்பதனை பல தடவை நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம். இது உண்மையும் ஆகும். இப்படிக் கூறும் போது பல விடயங்கள் இதனுள் அடங்குகின்றது. அழகான வசதியான வீடுகள், போக்குவரத்துப் பாதைகள், போக்குவரத்து வசதிகள், சுத்தமான, அழகான, வளமான நாடு என்பதாகும். பெரும்பாலானோர்க்கு, வருடம் முழுவதும் மின்சாரம், நீர், சுடுதண்ணீர் வசதியுடனான சிறந்த வசிப்பிட வசதிகள் உண்டு. டென்மார்க்கில் பலரிடம் தொலைக்காட்சி, சலவை இயந்திரம், தொலைபேசி, வாகனம், மற்றும் பல வசதிகள் உண்டு. எங்களுக்கு வேண்டிய உணவு கிடைக்கின்றது. சிறுவர்களின் பராமரிப்பிற்காக பகல்வேளை பராமரிப்பு, அல்லது பகல்நேர பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் உண்டு. வயது வந்தவர்கள் வேலை செய்கிறார்கள். முதியவர்களுக்கு வயோதிபர் இல்லம், வேறு விதமான வசிப்பிட வசதிகள் உண்டு. நோய்வாய்ப்படும் போது இலவச மருத்துவ வசதி கிடைக்கின்றது. அத்தோடு எல்லோருக்கும் சிறுவர் முதல் முதியோர் வரை ஆரம்பக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசமாக கல்வி பெறும் வசதியுண்டு.

டென்மார்க்கானது ஒரு சமூகப்பாதுகாப்பு இணைப்பினுள் பிணைக்கப்பட்டுள்ளது. அது எங்களை பெருமளவில் பாதுகாக்கின்றது. வெளியே நின்று பார்க்கும் போதுதான் அதன் பெறுமதியை எடை போட்டு பார்க்கக் கூடியதாகவுள்ளது. வரிகட்டுவது என்பது மனதிற்கு சிக்கலான ஒருவிடயம், ஆனால் எல்லோரும் வரி கட்டுகிறார்கள். அதன் பலாபலன்களையும் அனுபவிக்கிறார்கள்.
எங்கள் சமுதாய அமைப்பை "ஜனநாயக" அமைப்பு என அழைக்கிறோம். இந்தச் சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் உரிமையும், கடமையும் உண்டு. அதேபோல எவரின் ஆக்கிரமிற்பிற்கோ, கைதாவதற்கோ பயப்படாமல் ஒருவர் கருத்துக்களை வெளியிடவும், பரிமாறவும் முடியும். இவ்வாறாக இந்தச்சமுதாயம் அமைக்கப்பட்டுள்ளது.

**டென்மார்க் வசிப்பதற்கு சிறந்த வசதியான நாடாகும்.!**

ஒரு சில தினங்களுக்கு முன்பு நான், எனது வேலை தொடர்பாக அல்பேனியாவிற்கு சென்று திரும்பியிருந்தேன். அல்பேனியா ஐரோப்பாவில் ஒரு ஏழை நாடாகலாம். அல்பேனியா கடந்த 50 வருடங்களாக ஒரு சர்வாதிகார ஆட்சியின் கீழ் இருந்தது. அந்தக் காலங்களில் எதிர்க் கட்சியினர் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள். எவருடைய பிரயோசனமான அர்த்தமுள்ள கருத்துக்களுக்கும் இடமில்லை. இதனால் ஏழ்மையும், பரிதாபகரமான நிலைமையும் தான் அங்கு தோன்றியுள்ளது. மக்களிடம் பணமில்லை. அன்றாட வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலைமை தோன்றியுள்ளது. மக்கள் இன்று தங்கள் கருத்துக்களை பயமின்றி தெரிவிக்கக் கூடியவர்களாகவுள்ளார்கள், அதே நேரத்தில் அதிமுக்கிய தேவையான வேலை, வசிப்பிடம், உடை என்பன அவர்களுக்குப் போதியனவாக இல்லை என்பதை நான் சந்தித்த பல அல்பேனியர்களிடம் இருந்து அறிந்து கொண்டேன். இவர்கள் விருந்தோம்பும்

பண்பும், தயவான குணம உடையவர்களாக விருக்கிறார்கள்.
மேற் கூறிய விடயமானது சிந்தனைக் குரியதாகின்றது. பல டெனிஸ்காரர்களிடம் விருந்தோம்பும் பண்போ, அல்லது மற்றவர்களுக்கு உதவி செய்யும் குணமோ இல்லை. பெருமையும், தப்பபிப்பிராயமும் எதிரான சிந்தனைகளுக்கு காரணங்களாகும். உதவி செய்வதற்கும், அறிவதற்கும் பல வழிகள் உண்டு.

நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகத்தின் ஒரு பகுதியை பற்றி மட்டும் நாங்கள் சிந்திப்பதைக் கைவிடவேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாங்கள் இழந்த உணர்வுகளையும், பரம்பரை வழக்கங் களையும் சொத்துக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சொத்துக்களை சேகரிப்பதை விட்டுவிட்டு கருத்துக் களையும் விடயங்களையும் சேகரிக்க வேண்டும். இப்படி செய்வதினால் பொறுமையை உருவாக்க முடியும். செல்வம் என்பது சேகரிக்கப்படும் பொருட்களின் பரிமாணத்தில் தங்கியுள்ளது அல்ல, மனிதர்களுக்கிடையிலான தொடர்பு, குடும்பம், சிநேகிதம் என்பனவற்றில் தான் தங்கியுள்ளது. பணத்தினால் மட்டும் தனிமையை போக்க முடியாது. ஒரு மனினுடைய பெறுமதியை வாகனத் தினாலோ, தொலைக்காட்சியினாலோ ஈடு செய்ய முடியாது.
ஆதலால் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்திருப்பது, தனது கலாச்சாரத்தைப் பற்றி அறிந்திருப்பது, பாடல்களை, நடனங்களை, இலக்கியங்களை, புராணக் கதைகளை, கற்பனைக் கதைகளை அறிந்திருப்பது மிக முக்கியமாகும். இதுவே செல்வமாகும். நான் இங்கு கூறியது டெனிஸ்காரர்களுக்கு மட்டும் பொருந்தும் என்றல்ல, "பொருட்களை மட்டும் தேடும்" அகதிகளுக்கு முற்றிலும் பொருத்தமானதாகும். ஒரு டெனிஸ்காரர், ஏழை நாடான அல்பேனியாவிலிருந்து கற்பதற்கு பல விஷயங்கள் கிடைக் கின்றது. அதே போன்று ஒரு அகதியிடம் இருந்து அல்லது வேறு நாட்டிலிருந்து கற்பதற்கும் பல விடயங்கள் உண்டு. பலவித வசதிகள் கொண்ட செல்வமான நாட்டிலிருந்து ஒரு அகதி பல விடயங் களைக் கற்கலாம், அது மட்டுமல்ல, எதனைச் செய்யக் கூடாது என்று அறிந்திருக்கவும் கற்கவும் வாய்புண்டு.

ரோல்ஸ் ஜோகன்சன்
Troels Johansen

# Nævnet for Etnisk Ligestilling

## - til fremme af etnisk ligestilling i alle dele af samfundet

*"Nævnet for Etnisk Ligestilling"* har til formål at fremme etnisk ligestilling i alle dele af det danske samfund - juridisk, kulturelt, holdningsmæssigt, praktisk og socio-økonomisk.

*"Nævnet for Etnisk Ligestilling"* skal gøre en effektiv indsats for at fremme etnisk ligestilling og medvirke til at skabe gode og harmoniske relationer mellem folk, uanset etnisk baggrund.

*"Nævnet for Etnisk Ligestilling"* kan både udtale sig om lovgivning, offentlig forvaltning, privat virksomhed og andre forhold, som har at gøre med forholdet mellem det danske samfund og de etniske mindretal.

*"Nævnet for Etnisk Ligestilling"* kan rekvirere dokumentation og viden til at underbygge sine synspunkter samt komme med forslag til indsatser. Nævnet aflægger beretning til Folketinget én gang om året.

*"Nævnet for Etnisk Ligestilling"* behandler ikke enkeltsager, men kan henvise sådanne til relevante instanser. Enkeltsager kan danne grundlag for nævnets behandling af principielle sager.

*"Nævnet for Etnisk Ligestilling"* er nedsat ved en lov, som blev vedtaget af Folketinget i juni 1993. Nævnet er uafhængigt og består af 15 medlemmer, som udpeges af statsministeren for fire år ad gangen.

*"Nævnet for Etnisk Ligestilling"* har nedsat fire arbejdsgrupper, som arbejder med a) medier og offentlighed, b) arbejdsmarkedsforhold, c) sociale forhold og retsforhold samt d) uddannelse.

*"Nævnet for Etnisk Ligestilling"* har til hensigt at gøre opmærksom på, at etnisk ligestilling og anstændig behandling af de etniske mindretal er selvfølgelig. Det gælder f.eks. i medierne, på arbejdsmarkedet, i den offentlige forvaltning, på uddannelsesinstitutioner, i boligområder, i fritiden og i kulturlivet.

*"Nævnet for Etnisk Ligestilling"* vil bl.a.
- opfordre myndigheder, institutioner og privatpersoner til at behandle etniske mindretal ligeværdigt,
- opfordre de etniske mindretal til at deltage aktivt i udviklingen af det danske samfund,

- komme med forslag til forbedring af vilkårene for etniske mindretal i det danske samfund.
- opfordre virksomheder til at ansætte personer med en anden etnisk baggrund end den danske på lige fod,
- komme med forslag til lovgivning mod etnisk forskelsbehandling,
- opfordre skoler og andre uddannelsesinstitutioner til at inddrage emner vedr. kulturmødet i undervisning,

*"Nævnet for Etnisk Ligestilling"* består af følgende medlemmer:

Peter Seeberg (formand)
Fakhra Mohammed, Indvandrernes Repræsentantskab (næstformand)
Nusrettin Arkin, Indvandrernes Repræsentantskab
Chandra Jayamanne, Indvandrerrådet
Bashy Quraishy, Indvandrerrådet
Joseph Obeng, IND-sam (Etniske Mindretals Sammenslutning)
Hassan El Quargui, IFD (Indvandrernes Fællesråd i Danmark)
Bente Nielsen, Amtsrådsforeningen
Kommunernes Landsforening
Dansk Arbejdsgiverforening
Charlotte Fuglsang, LO
Christian Lund Jepsen, Dansk Folkeoplysnings Samråd
Eva Munck, Dansk Flygtningehjælp
Ole Hammer, Mellemfolkeligt Samvirke
Indenrigsministeriet (tilforordnet)

Henriette Skouenborg, sekretariatsleder

**Nævnet for Etnisk Ligestilling**
**Christiansborg Slotsplads 1**
**1218 København K**
**Tlf. 33 92 33 80 • Fax 33 92 45 54**

*துர்க்காஸ் வீடியோ மூவிஸ்*

திருமண வைபவமா? பூப்புனித நீராட்டு வைபவமா? பிறந்தநாள் கொண்டாட்டமா? கலை கலாச்சார விழாவா? எந்தவிழாக்களானாலும் அதிநுட்ப கருவிகளைக் கொண்டு சிறந்த முறையிலான வீடியோ படப்பிடிப்புக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய ஸ்தாபனம்

*துர்க்காஸ் வீடியோ மூவிஸ்*

T.P 97 32 13 09
M .Siva
Damtoften 22, 1 sal tv
6950 Ringekøbing

# சகல இனத்தவருக்குமான சம அந்தஸ்து நீதிச்சபை

எல்லா இனத்தவருக்கும் இனவேறுபாடின்றி டெனிஸ் சமுதாயத்தில் அனைத்துத் துறைகளிலும், சமஅந்தஸ்து வழங்க வேண்டும் என்பதை முன்னெடுத்துச் செல்வதே "சகல இனத்தவருக்குமான, சமஅந்தஸ்து நீதி சபையினரின்" முக்கிய நோக்கமாகும்.

எல்லா இனத்தவர்களிடையேயும், பாகுபாடின்றி, ஒரு நட்புறவை வளர்ப்பதுடன், அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கவகையில் சமமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை சகல இனத்தவருக்குமான, சமஅந்தஸ்து நீதி சபை முன்னெடுத்துச் செல்லும்.

டெனிஸ்சமுதாயத்தினருக்கும், சிறுபான்மை இனத்தவருக்கு மிடையேயான, சட்டம், பொதுநிர்வாகம், தனியார்துறை ஆகியவற்றின் நிலைப்பாடுகளைப்பற்றிக் கூறவும், அதற்கான ஒரு ஒழுங்கு முறைகளை எடுப்பதும் சகல இனத்தவருக்குமான, சமஅந்தஸ்து நீதி சபையினரின் தலையாய கடமையாகவுள்ளது.

இனங்களுக்கிடையே நற்பயன்கள அளிக்கக்கூடிய வகையிலும் தமது கருத்துக்கிசைந்த வகையிலும் சரியான முறையில் ஒரு பிரேரனையை மேற்படி சபையினர் கொண்டுவரக்கூடியதாகவிருக்கும். அத்துடன் இச்சபையினரின் அறிக்கையானது வருடத்திற்கு ஒருமுறை பாராளுமன்றத்தில் சமர்ப்பிகக்ப்படும்.

சகல இனத்தவருக்குமான, சமஅந்தஸ்து நீதி சபையினர் ஒவ்வொரு விடயத்தையும் பரிசீலித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். ஆனால் அதனேடு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு, அவற்றைத் தெரிவித்துக் கொள்வார்கள். அத்துடன் ஒவ்வொரு விடயங்களும், அதனடிப்படையில் சபையினரால் பரிசீலிக்கப்படும்.

இச்சபையானது 1993 ம் ஆண்டு ஆனி மாதம், பாராளுமன்றத்தினால் சட்டப்படி ஏற்றுக்கொண்டு உருவாக்கப்பட்டதாகும். அத்துடன் இது பிரதம மந்திரியினால் 4 வருடங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட 15 அங்கத்தவர்களைக் கொண்ட, ஒரு சுதந்திரமான சபையாகும்.

இச் சபையானது பொது சனத்தொடர்பு, வேலைச்சந்தை நிலைமை, சமூகநிலைமை, கல்வி போன்ற நான்கு பிரிவாக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

சகல இனத்தவருக்குமான, சமஅந்தஸ்து நீதி சபையானது பொது சனத்தொடர்பு, பொது நிர்வாகத்துறை, கல்வி நிலையங்கள், வசிப்பிடம் தொடர்பான அமைப்புகள், பொழுது போக்கு நிலையங்கள், கலாச்சாரம், போன்றவற்றில், டெனிஸ் சமூகத்தினர் சிறுபான்மை இனத்தவருக்கு சமவேலைவாய்ப்பு வழங்குகிறார்களா என்பதையும், சிறுபான்மை இனத்தவரை மேற்கூறிய பகுதிகளில் நல்ல முறையில் பராமரிக்கிறார்களா என்பதையும், அவதானித்துக்கொண்டிருப்பதையும் மேற்படி சபையானது நோக்கமாகக் கொண்டுள்ளது.

அத்துடன் இச்சபையானது பின்வரும் விடயங்களில் பிரதான பங்கு வகிக்கின்றது.

சிறுபான்மை இனத்தவருக்குச் சம அந்தஸ்து வழங்கும்படி தனிப்பட்டோரிடமும், மிக முக்கியமான நிலையத்தாரிடமும், அதிகார சபையினரிடமும் வேண்டுகோள் விடுப்பது.

டெனிஸ் சமுதாயத்தின் அபிவிருத்தியில் கலந்து கொள்ளுமாறு சிறுபான்மை இனத்தவருக்கு வேண்டுகோள் விடுப்பது.

டெனிஸ் சமுதாயத்தில் சிறுபான்மை இனத்தவருக்கு, என்னென்ன தேவைகள், என்னென்ன நன்மைபயக்கும் என்பவற்றை பிரேரணைகள் மூலம் தெரியப்படுத்தல்.

அடிப்படையில் டெனிஸ் இனத்தவராக இல்லாது, வேறு இனத்தைச் சார்ந்தவருக்கு, டெனிஸ் இனத்தவரைப் போன்று சமமான வேலையில் அமர்த்துமாறு ஸ்தாபனங்களிடம் வேண்டுகோள் விடுப்பது.

இன அடிப்படையில் வித்தியாசமான முறையில் பரிசீலனை செய்வதற்கு எதிராகப் பிரேரணை கொண்டு வருதல்.

பாடசாலைகளிலும், மற்றும் இதர கல்வி நிலையங்களிலும் பலவித கலாச்சாரங்களைப் பற்றிய கல்வியைப் புகுத்துமாறு வேண்டுகோள் விடுப்பது.போன்ற பல விடயங்களில் மேற்படி சபையானது பங்கு வகிக்கின்றது.

❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄


# *tuli publikation*

திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ், பிறந்தநாள் விழா அழைப்பிதழ், கலை கலாச்சார விழா போன்ற அனைத்து அழைப்பிதழ்களுக்கும் ஏனைய பதிப்புக்களையும் தரமான முறையில் பதிப்பித்துத் தருபவர்கள்

***tuli publikation***

***Baunehøjen - 35***

***3320 Skaevinge***

***Danmark***

***tlf: 42 28 90 12***

# ET TILBUD TIL DIG SOM BLIVER DISKRIMINERET

Når du bliver udsat for negativ forskelsbehanling på grund af din hudfave, tro, nationalitet eller etniske tilhørsforhold, kan der være tale om **racediskrimination.** I følge den danske lovegivning samt internationale konventioner, er racediskriminiation **forbudt**. Alligevel bliver etniske minoriteter til daglig udsat for diskrimination af f.eks. enkeltpersoner, politiet, transportselskaber, diskoteker, skoler, sygehuse og socialcentre, med frygt, passivitet og isolation som følge.

**Dokumentations - og rådgivningscenteret** (DRC) er et tilbud til etniske minoriteter (indvandrere, flygtninge og asylsøgere) i diskriminations spørgsmål. DRC er en uafhængig institution, som drives af de etniske minorititeter selv. Det betyder blandt andet, at du kan få hjælp på dit eget sprog. **Formålet med Centeret er:**

1. At indsamle dokumentation om diskrimination

2. At give råd og vejledning til etniske minoriteter som føler sigdiskrimineret

3. At give juridisk hjælp når du bliver diskrimineret af organisationer, institutioner og enkeltpersoner

4 At arbejde for holdningesændringer og opinionspåvirknig med henblik på at bedre relationerne mellem alle grupper i samfundet

Hvis du mener at være udsat for diskrimination er du velkommen til en samtale, eller til at ringe for at få oplysninger generelt om diskrimination.

**Dokumentations - og rågivningscenteret om racediskrimination**
**Bredgade 36 C. 1260 København K, tlf. 33 32 39 45, Fax 33 32 08 24**

# அடக்கு முறைக்குள்ளாக்கப்படுபவர்கட்கு ஓர் வாய்ப்பு

உங்கள் தோல் நிறம், சமயம், தேசியம் அல்லது இன வேறுபாடுகள் காரணமாக பாதகமாக நடாத்தப்படும் பொழுது இதை இனவாத ஒடுக்குமுறை எனக் கூறலாம். டெனிஸ் சட்ட விதிகளின் படியும், சர்வதேச விதி முறைகளின் படியும் இன அடக்குமுறை தடை செய்யப்பட்டுள்ளது. இருந்தும் இச் சிறுபான்மை இனத்தவர்கள் நாளாந்தம் தனிநபராலும், பொலீசாராலும், போக்குவரத்துச் சபைகளினாலும் மற்றும் இரவு கிளப்புகளிலும், பாடசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும், சமூக(பொது)அலுவலகங்களிலும் பயந்து, அடங்கி, ஒதுங்கி நடக்க உட்படுத்தப்படுகிறார்கள்.

Dokumentations-og Rådgivning Centeret (DRC) என்ற அமைப்பு சிறுபான்மை இனத்தவர்களுக்கு (குடியேறியோர், அகதிகள், அகதி விண்ணப்பதாரர்கள்)அடக்குமுறை தொடர்பான பிரச்சினைகளுக்கு ஓர் வாய்ப்பு. இந்த அமைப்பு (DRC) சிறுபான்மை இனத்தவர்களால் உருவாக்கப்பட்ட ஓர் சுயாதீனமான நிறுவனம். அதாவது நீங்கள் உங்கள் சொந்த மொழியில் உதவிகளைப் பெறமுடியும்.

இவ்வமைப்பின் குறிக்கோள்களாவன,

1) அடக்குமுறை தொடர்பான தகவல்களை திரட்டல்.
2) அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் சிறுபான்மை மக்களுக்குஆலோசனை, உதவிகள் வழங்குதல்.
3) அமைப்புகள், நிறுவனங்கள், தனிநபர்கள் ஆகியோரால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுபவர்களுக்கு சட்ட உதவி வழங்குதல்.
4) சமூகத்தில் எல்லாப் பிரிவினரிடையே நல்ல ஒற்றுமை ஏற்பட அபிப்பிராய, கொள்கை பேதங்களை மாற்றிட பாடுபடுதல்.

**ஆகவே நீங்கள் மேற்படி பிரச்சினைகளுக்குட்பட்டிருந்தால் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படின் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

Dokumentation-og Rådgivning Centeret om Racediskrimination
Bredgade 36 C, 4 sal, 1260 Købe. K
Tlf; 33 32 39 45, Fax; 35 32 08 24

www.padippakam.com


Følgende historie er indsendt af én af KATPAHAM's yngste, tamilske læsere.

DEN HEMELIGE VEJ

Der var engang en herre som boede på en gård, en meget stor gård. På den gård var der maser af hemlige udveje, men der var en udvej man ikke kende noget til, fordi den var skjult, men kun én kende noget til den, det var karlen.

Han havde fundet den da hans far var karl her, for han var mesterkarl, det vil sige den bedste karl af alle karle, og han arbejdede også her på Grønnegård. Karlen hedder Per. Han er 20 år gammel. Pers far døde da Per var 10 år gammel.

Per er ved at høste. Pluslig sker der noget. En mand med en pistol står foran Per og sigter på Per med sin pistol. Nu kom herren og manden sigtede også på herren. Det var en tyv.

Tyven ville plyndre gården og så gik tyven ind i stuen. Tyven var så klog at låse laden hvor hele familien var, men så kom Per i tanker om den hemlige udvej. Så sagde Per til de andre at de skulle gå med ham, så fandt de udgangen og så kom de ud.

Så gik de til politiet, og så sagde overbetjenten at han kom, og så fik de fat i tyven.

T.Allan - 10 år,
Vejen.
6.10.1994.

***Hvis jeres børn har fødselsdag, så vil vi gerne ønske dem tilykke i bladet. Ønsker I at få en fødselsdaghilsen ? send navn, fødsels dato og billede.***

*தங்களது பிள்ளைகளின் பிறந்த தின வாழ்த்துக்கள் "கற்பகம்" இதழில் இடம் பெற வேண்டுமானால் பிள்ளையின் பெயர், பிறந்ததிகதி, போட்டோ போன்ற விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.*


படிப்பகம்

# சிங்கள - தமிழ் பிரச்சினையில் புதிய நம்பிக்கை... ?

### *நெதர்லாந்தின் அலன்ட் தீவுகள்! மண்டேலாவுக்கு முந்திய தென்னாபிரிக்கா! பிரச்சினைக்குத் தீர்வு கண்டது எவ்வாறு?*

பொதுஜன முன்னணியின் தலைமையில் அதிக மனிதாபிமானம் உள்ள அரசாங்கம் ஒன்று ஆட்சிக்கு வந்துள்ளது. விடுதலைப் புலிகள் புதிய பிரதமருடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே, நம்பிக்கையின் கீற்றுக்களை காணக் கூடியதாக உள்ளது.

அமைச்சரவையில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் புதிய தலைமுறையைச் சார்ந்தவர்களாகவே உள்ளார்கள். பழைய தலைமுறையினரின் விசேட குணாம்ச மாகவுள்ள, தப்பபி ப்பிராயங்களற்ற ஒரு நம்பிக்கையான அமைச்சரவையாகவே இது உள்ளது. எனவே, நீண்ட காலமாகப் பழமை வாய்ந்த இனப் பிரச்சினையை இவர்கள் புதிய கண்ணோட்டத்துடன் கவனம் செலுத்த முன் வருவார்கள் என நாம் எதிர்பார்க்க முடியும்.

இலங்கை முன்னர் ஒரு காலத்தில் இருந்ததைப் போல மீண்டும் ஒரு அழகான சொர்க்க பூ மியாக மாறுமா?

அமைச்சரவை எதிர் நோக்க வேண்டிய பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இதில் இனப் பிரச்சினை முன்னுரிமையைப் பெற்றுக் கொள்ளும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால், இதற்காகப் பாரிய அளவிலான "சுத்திகரிப்பு"க் களைச் செய்ய வேண்டியிருக்கும். இது ஒரு வகையில் அமைச்சர்களின் நேரத்தை பெருமளவில் எடுத்துக் கொள்வதாக இருக்கும்!

### தீர்வை முன்னெடுப்பதற்கான அணுகு முறைகள்

ஒரு இணங்கப்பட்ட கணிசமான கால கட்டத்திற்கு யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வது தொடர்பான இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது இப் பிரச்சினைக்கான ஒரு அணுகு முறையாகும். இந்தவித நடைமுறையின் மூலமே முதலில் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் தாம் என்றுமே விரும்பாத இந்த யுத்ததை நிறுத்தித் தம்முடைய உடல்கள் பொலித்தீன் பைகளில் கொண்டு வரப்படுவதை தடுத்து நிறுத்த முடியும். மறுபுறம் அப்பாவித் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய உயிர் முதல் கோவில்கள், தேவாலயங்கள், சொத்துக்கள் போன்றனவற்றை அழிக்கும் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சு தாக்குதல்களினால் வரும் அழிவிலிருந்து பாதுகாத்துக் கொ்ள்ளவும் இதுவே உதவும். இதன் மூலமாகப் பெருமளவிலான பணவிரயத்தையும் தவிர்க்க முடியும். வெறுமனே சமாதானம் பாதிக்கப் படுவதையிட்டு இன்றைய நிலையில் யாவரும் அசட்டையாக இருப்பதை யாருமே ஏற்றுக்கொள்ள முடியாது!

இவ்வாறானதொரு சூழலிலே அடுத்ததாக ஒரு கேள்வி எழுப்பப்படலாம். பொதுவாக இரு தரப்பினர் மத்தியிலும் எழக் கூடிய ஆத்திரமூட்டலையும், கோபத்தையும் சமாளிக்கக் கூடிய வகையில் எவ்வாறு இந்தச் சூழலை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்? இந்தியாவிற்கு இதிலொரு முக்கிய பங்கு உண்டென்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆயினும் இதனைப் பொறுத்த வரையில் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அரசாங்கம்(சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, பிரித்தானியா சார்பாக) ஒரு எதிர் நிலைக்

கொள்கையைக் கடைப்பிடிப்பதான ஒரு சந்தேகம் இருக்கும் வரையிலேயே இந்த நிலைமை இருந்தது!

தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து பிறழாத நிலைமையுடன் திருமதி சந்திரிகா குமாரதுங்க இயலுமானவரை இந்திய நல்லாசியுடன் இப் பிரச்சினைக்கு இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வைக் காணமுடியும்.

## ஒற்றையாட்சியும் சமஷ்டியும் தானா?

நீண்ட காலமாக அலசப்பட்டு வந்த முரண்பாடுகளை உருவாக்கியுள்ள ஒற்றையாட்சி முறையும், சமஷ்டி முறையும் மட்டும் தானா இன்றைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கருவிகளாகவுள்ளன. இந்த இரண்டையும் தவிர வேறு ஏதாவது முறைமைகள் உள்ளனவா?

இதற்கு வழிசமைக்கக் கூடிய பல முறைமைகளை இனங் காணலாம். நெதர்லாந்தின் அலன்ட் தீவுகளையும், மண்டேலாவுக்கு முந்திய தென்னாபிரிக்காவையும் இதற்கான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். பாடநூல்களில் அடிக்கடி தென் ஆபிரிக்காவை ஒற்றையாட்சியின் கீழ் அமைந்த ஒரு சமஷ்டி அமைப்பு என அடிக்அடி குறிப்பிட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த காலத்தில் எமது வரலாறு முறிந்த உடன்படிக்கைகளையும், சிதைந்த வாக்குறுதிகளையுமே கண்டு வந்தது. இந்த அனுபவங்களின் பின்னணியில் உறுதியும் வலுவும் இல்லாத பாதுகாப்பற்றஅரசியலமைப் பொன்றினை ஏற்றுக் கொள்ளுமாறு தமிழ் மக்களை நெருக்குவது கடினமானதொரு விடயமாகவே இருக்கும்.

முதலாவது பிரச்சினை எல்லைகள் சம்பந்தமானது! எல்லைகளை மீள வரைதல் சம்பந்தமான ஆலோசனை ஒன்றை பிரதமர் நாட்டு மக்களின் முன்னர் வைத்துள்ளார். இதன் அடிப்படையில் இப்போதுள்ள எட்டு மாகாணங்களுக்குப் பதிலாக ஐந்து மாகாணங்களைக் கொண்ட நாடாக இலங்கை மாற்றியமைக்கப்படலாம்.

வட மாகாணம் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள திருமலை மற்றும் மட்டக்களப்பின் மாவட்டங்களுடன் இணைக்கப்படுவது தமிழர்களைத் திருப்திப் படுத்துவதாக அமையுமா? என்ற கேள்விக்கான பதில் எவ்வாறு அமையும் என்பதைத் தெளிவாகக் கூறமுடியாது.

இவ்வாறு முடிவை ஏற்படுத்தும் நிலைமையில் சிக்கல் ஏற்படும். இணக்கம் காண முடியாத நிலைமை தோன்றினால் மட்டக்களப்பு தென் பகுதியையும் அம்பாறை மாவட்டத்தையும் ஒரு மூன்று மொழிகளைக் கொண்ட தனியான மாகாணமாக இணைத்துக் கொள்வதன மூலம் இதற்கான தீர்வை சுலபமாகக் காண முடியும். இதன் மூலமாக முஸ்லீம் மக்கள் தம்முடைய சுயாட்சிப் பகுதியையும் கோரிக்கையையும் பெற்றுக் கொள்ள முடியும்.

## கூட்டுத் தலைமை ஆட்சி

ஆனால் இதற்கு மேலாக இந்த மூன்றின மக்களையும் கொண்டுள்ள மாகாணம் அரசியலமைப்புச் சொற் பிரயோகத்தில்

கூட்டுத் தலைமை ஆட்சி **(Condominium)** எனக் குறிப்பிடப்படும். அந்தப் பகுதியில் ஒரு அர்த்தமுள்ள ஆட்சிப் பகிர்வை மூன்று சமூகங்களும் பெற்றுக் கொள்வதையே இது குறிப்பிடும். இது ஆல்லோ — எகிப்திய சூடானிய முறையை ஒத்ததாக உள்ள அதே வேளையில், சில பசுபிக் தீவுகளிலும் இதே போன்ற அமைப்பு முறை நடைமுறையில் உள்ளதைக் காண முடியும்.

"கூட்டுக் கட்டுப்பாடு" முறையை உருவாக்குதல் இதற்கான ஒரு வழிமுறையாக அமையலாம். இவ்வாறான கூட்டுக் கண்காணிப்பு ஏனைய மாகாணங்களைப் போல சகல விடயங்களில் கட்டுப்பாடுகளைக் கொண்டதாக இருப்பதற்கு அனுமதிக்கப்படுவதாகவும் இருக்க வேண்டும். குறிப்பாகக் காணிப் பங்கீட்டைப் பொறுத்தவரையில் இது கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியமானதொன்றாகும்.

சிங்களவர்களைப் பெருமபான்மையாகக் கொண்ட கொழும்பும் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் வாழும் மாகாணமும் மாற்றியமைக்கப்பட்ட வடக்கு மாகாணத்தின் கூட்டு மேற்பார்வை நியாயாதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

இதன் மூலம் முஸ்லீம் மக்களும் அதிகாரத்தில் முதன்மை நிலையை அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். ஏதாவது சர்ச்சைகள் உருவாகும் நிலையில் அவர்கள் கொழும்புடனும் யாழ்ப்பாணத்துடனும் பேச்சு வார்த்தை நடத்தலாம். ஆனால், முஸ்லீம்கள் முன்னுரிமைக்குரிய விடயங்களை வற்புறுதத்துவதற்கான உரிமைகளைக் கொண்டிருப்பர்.

ஒரு தமிழ்ப் பிராந்தியம், ஒரு முஸ்லீம் பிராந்தியம் பிரதான பிராந்தியமாக அமையும். ஒரு சிங்கள மாகாணம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மூவின அரசாங்க இலங்கை ஒன்றியம் **(Union of Ceylon)** இருக்கும் — கூட்டுத் தலைமை ஆட்சி **(Concept of Condominium)** கோட்பாட்டை இவ்வாறு தான் சுருங்கக் கூற முடியும். மட்டக்களப்பு தெற்கும் அம்பாறை மாவட்டமும் ஒரு முஸ்லீம் பிராந்தியமாகக் கருதப்படலாம். அங்கு குறிப்பிடத்தக்களவு சிங்கள மற்றும் தமிழ் சிறுபான்மையினர் இருப்பர். இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முஸ்லீம்கள் தொடர்பாக எழக்கூடிய சிக்கல் நிலைக்கான எமது தீர்வு இதுவேயாகும். முஸ்லீம் மாகாணம் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள மாகாணத்தினதும் இலங்கை தமிழரின் வடக்கு — கிழக்கு பிராந்திய கவுன்சிலினதும் கூட்டு மேற்பார்வையின் கீழ் இருக்கும். (வடக்கு — கிழக்கு பிராந்திய கவுன்சில் வட மாகாணத்தையும் திருகோணமலையையும் மட்டக்களப்பு வடக்கையும் உள்ளடக்கியதாக அமையும்). முஸ்லீம் மாகாணத்தில் வாழ்கின்ற சிங்கள மற்றும் தமிழ் சிறுபான்மையினருக்கு ஏதாவது பிரச்சினை எழுமானால் கூட்டுத் தலைமை ஆட்சி பாணியில் கொழும்புடனும் யாழ்ப்பாணத் துடனும் முதலில் ஆலோசனை கலக்கப்பட வேண்டும். இதே போலவே சிங்கள மாகாணத்திலும் இலங்கைத் தமிழரை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணத்திலும வாழ்கின்ற முஸ்லீம் களுக்கு ஏதாவது பிரச்சனை தோன்றினால்

முஸ்லீம் பிராந்திய கவுன்சிலுடன் ஆலோசனை கலக்கபபட வேண்டும்.

## அதிகாரப் பகிர்வு

சமஷ்டி மற்றும் ஒற்றையாட்சி விவகாரம் தொடர்பாக விட்டுக்கொடுத்து இணங்கிப்போகும் நிலைப்பாடொன்றை ஏற்படுத்துவதே அடுத்த முக்கிய பிரச்சினையாகும். ஒற்றையாட்சிக் கோட்பாடு தொடர்ந்து இருக்க வேண்டுமென்று சிங்களப் பெருபான்மையினர் வலியுறுத்தினால் எவ்வாறெனினும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பேச்சு வார்த்தைகள் மூலமாக இணங்கிக் கொள்ளப்பட்ட தீர்வுத் திட்டம் ஒன்று முன் வைக்கப்பட வேண்டும். இது அரசியல்வாதிகள் கையாள வேண்டிய விடயமாகும். மிகுந்த எச்சரிக்கையுடன் விவகாரங்களை கையாள வேண்டும். அதிகாரப் பகிர்வு தொடர்பான தற்போதைய திட்டத்திலே"தேசிய கொள்கைக்கு ஆட்பட்டு" என்ற சொற்றொடரொன்று காணப் படுகின்றது. இது அகற்றப்பட வேண்டும். உதாரணமாக கல்வி போன்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் இரு பிரச்சினைகள் எழக் கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. எமது இலங்கைத் தமிழ் மாணவர்கள் சிங்கள சரித்திர வியலாளர்களினால் எழுதப் பட்டவாறே இலங்கைச் சரித்திரத்தைப் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகலாம். சிங்கள – தமிழ் போர்கள் என்று கூறப் படுகின்றவற்றின் சரித்திரத்தை (இவை உண்மையில் வம்ச ஆட்சிகளுக்கு இடையேயான சண்டைகளாக இருக்கின்ற போது)எமது மாணவர்கள் கிரகிக்க வேண்டியது தேவைதானா? எனவே, எமது மாணவர்கள் இலங்கைத் தமிழ்க் கல்வி மான்களினால் எழுதப்பட்டவாறே சரித்திரத்தைப் படிக்க வேண்டும். இரண்டாவதாக தமிழில் மாத்திரம் கல்வியைக் கற்பதன் மூலமாக கிணற்றுத் தவளைகள் போல வெளியுலகை நோக்கும் நிலைக்கு எமது மாணவர்கள் ஆட்படுத்தப்பட வேண்டுமா? பல்கலைக் கழகத்தில் பிரவேசிக்கத் தகுதியுடைய சகல தமிழ் மாணவர்களையும் எமது தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் அனுமதித்து அவர்களை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதே வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரேயொரு வழியாகும்.

இவ்வாறு செய்தால் எமது திறமைகளையும் எமது ஆற்றல்களையும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளுக்கும் ஏன் முதலாவது உலக நாடுகளுக்கும் கூட நாம் ஏற்றுமதி செய்ய முடியும். எமது மாணவர்கள் குறிப்பிட்ட சில மட்டங்களில் தொழில் வாய்ப்புகளுக்காக இலங்கையில் சிங்களவர்களுடன் போட்டி போட வேண்டியிருக்காது. உயர் கல்விக்குத் தகுதியுடைய எமது மாணவர்கள் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப் படுவதை சாத்தியமான அளவுக்கு குறைக்க இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மார்க்கமாக அமையும். "தேசிய கொள்கைக்கு ஆட்பட்ட" வேறுபல விவகாரங்களும் இருக்கின்றன. இவை குறித்தும் கவனிக்கப்பட வேணடும்.

## மகத்தான மோசடி

மாகாண சபைகள் சட்டத்தை வெகு உன்னிப்பாக ஆராய்ந்தால் 1919ஆம் ஆண்டின் இந்திய ஆரசாங்கச் சட்டத்தின் கீழ் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசினால் கடைப் பிடிக்கப்பட்ட இரு நிலைப் பட்ட ஆட்சியை ஒத்த அம்சம் இதிலும் இருப்பதை அவதானிக்க முடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்தனா வின் நிர்வாகத்திலே இருந்த ஒருவர் தான் இந்த "ஒத்த அம்சம்"மாகாண சபைகள் சட்டத்திலும் புகுந்து கொள்ளக் காரணமாயிருந்தார். அவர் 1919 அளவில் இளம்பையனாக இருந்திருப்பார். அவர் வேறுயாருமல்ல ஜே.ஆர்.ஜெயவர்தனாவே! இலங்கையின் மாகாண சபைகள் சட்டத்தில் இருக்கும் இந்த இரு நிலை அம்சம் 1919 இந்திய அரசாங்கச் சட்டத்தில் இருந்ததைப் போன்றே ஒரு பண்பான அதிகாரப் பரவலாக்கலுக்கு நெருக்கமான ஒன்றல்ல என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இது ஒரு மகத்தான மோசடியாகும்.

ஆனால் மனிதர்கள் செய்த பாவங்களில் இருந்து விடுபடுவதற்கு வழிவகைகளும் இருக்கின்றன. மங்கள முனசிங்க தலைமையிலான தெரிவுக் குழுவினால் ஏற்கனவே செய்யப்பட்டதைப் போல தற்போதைய அதிகாரப் பிரிவு குறித்து குறிப்பிட்ட சில மாற்றங்களுக்கு உட்பட்டு உன்னிப்பாகபரிசீலிக்க வேண்டிய தேவை இருக்கிறது. மங்கள முனசிங்க குழுவினரால் பிரேரிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு ஏற்புடையதென நிரூபிக்க முடியும்.

## ஒற்றையாட்சி ஒரு புனைகதை!

பெரிதும் அஞ்சப்படும் சமஷ்டி — ஒற்றையாட்சி திரிசங்கு நிலையை மனதில் கொண்டு நோக்குகையில் இந்த மாற்றங்கள் எவையாக இருக்க முடியும்? பிரிவினை வாதத்துக்கும் சின்னாபின்னமாகும் நிலைக்கும் எதிரான ஒரு பாதுகாப்பான நிலையே ஒற்றையாட்சி முறை என்று கருதுவது ஒரு புனைகதை போன்றதாகும். நன்கு மத்திய மயப்படுத்தப்பட்ட ஆட்சிகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றான ஐக்கிய இராச்சியம் (United Kingdom) ஸ்கொட் லாந்து மற்றும் வேல்ஸ் பிரிவினை அபாயத்தை எதிர் நோக்குகிறது. பிளேயரின் தலைமைத்துவத்தின் கீழான பிரிட்டிஷ் தொழில் கட்சி ஸ்கொட்லாந்துக்கும் வேல்ஸ்சுக்கும் தனித் தனியான பாராளுமன்றங்களை அமைக்க வேண்டும் என்று யோசனையைத் தெரிவித் திருக்கிறது.

மத்தியமய ஆட்சிக்கு ஒரு தனித்துவமான உதாரணமாக விளங்கும் பிரான்ஸ் கூட பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்குவது தொடர்பாக திட்ட மிடுகிறது. ஸ்டாலினின் தலைமையிலான முன்னாள் சோவியத் யூ னியனும் டிட்டோவின் சர்வாதி காரத்தின் கீழான யூ கோஸ்லாவாக்கியாவும் கம்யூ னிஸ்ட் கட்சியின் கொடுங்கோன்மை கட்டுப்பாட்டின் கீழ் பெயரளவிலான சமஷ்டி அரசுகளாகவே இருந்தன. இறுதி விளைவு என்ன? ஸ்டாலினதும் டிட்டோவினதும் மறைவையடுத்து இந்த மத்தியமயப் படுத்தப்பட்ட அரசுகள் தவிர்க்க முடியாத வகையில் சின்னா பின்னமாகின. இவை சமஷ்டி அரசுகள் என்ற ஏமாற்றின் கீழ் செயற்பட்டன. ஆனால் கம்யூ னிஸ்ட் கட்சியின் மத்தியமயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தன. இவ்வாறாக மத்திய மயப் படுத்தப்பட்டிருந்த அரசுகள் கூட பிரிந்து பல நாடுகளாகும் நிலைக்கு விதிவிலக்கானவையாக இருக்க முடியவில்லை.

## தீவிர சிங்களப் போக்கின் நிலைப்பாடு

சமஷ்டி ஒற்றையாட்சி என்பவற்றை தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். இதுவே பிரச்சினைகளுக்கு பெரும்

காரணியாக இருக்கிறது. இக் கட்டுரையின் மேற்பகுதியில் தெரிவிக்கப் பட்டிருந்ததைப் போல பல உதாரணங்கள் இதற்கு இருக்கின்றன.

ஆனால் தீவிர போக்குடைய சிங்கள அரசியல் சக்திகள் சமாதானமான அரசியல் தீர்வொன்றுக்கு இணங்குவதிலும் பார்க்க இலங்கைத் தீவை அழிந்தொழிந்து போகவிடவும் தயாராயிருக்கக் கூடும். மங்கள முனசிங்க குழு விதப்புரை செய்திருக்கும் அதிகாரப் பகிர்வை பல்வேறுபட்ட மாற்றங்களுடன் தொடர்ந்து வைத்திருக்க முடியும். ஆனால் தேசிய கொள்கைக்கு உட்பட்ட என்ற வாசகத்தை அகற்ற வேண்டும்.

## உயர் நீதிமன்றின் பங்கு

அதிகாரப் பரவலாக்கல் பிரச்சினையைப் பொறுத்தவரை உயர் நீதிமன்றமே முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக இருக்கிறது. அரசியல் ரீதியாக நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருப்பவரின் கையாளாக நீதிமன்றம் இருக்கிறது என்பதை நிராகரிப்பதற்கில்லை.இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான மாற்று வழியை பின்வருமாறு கொள்ளலாம். உயர் நீதிமன்றமானது சிங்கள நீதிபதிகளை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கின்ற அதே வேளை தமிழ் வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் மற்றும் அவரது அமைச்சரவையின் ஆலோசனை யுடன் நியமிக்கப்படும் மூன்று நீதிபதிகளும் முஸ்லீம் மாகாண கவுன்சிலினால் நியமிக்கப்படும் இரு நீதிபதிகளையும் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

எந்தவொரு விவகாரத்தின் மீதும் அதிகாரத்தைப் பயன்படுத்துகின்ற விடயத்தில் சர்ச்சையொன்று மூளுமிடத்து அதைத் தீர்ப்பதில் பெரும் பான்மையான தமிழ் நீதிபதிகளின் (மூவரில் இருவர்)சம்மதம் பெறப்பட வேண்டும். அதே போலவே முஸ்லீம் விவகாரங்கள் மீதான சர்ச்சைகளில் இரு முஸ்லீம் நீதிபதிகளினதும் சம்மதம் பெறப்பட வேண்டும்.

சர்ச்சைகளை தீர்க்கும் விவகாரத்தில் பேச்சு வார்த்தைகள் மூலமான இணக்கப் பாடொன்றை காண்பது என்பது சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லீம் நீதிபதிகளைப் பொறுத்ததாகும். தங்களது நீதிபதிகளை திருப்பியழைப்பதாயின் தமிழ் மாகாணத் தினதும் முஸ்லீம் மாகாணத்தினதும் முதலமைச்சர்கள் அவர்களது அமைச்சரவைகளின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருப்பர். இந்த வகையான ஏற்பாட்டின் மூலமும் மாகாணங்களின் அதிகாரங்களில் கை வைக்க முடியாத நிலை தவிர்க்கப்படும். இதே ஏற்பாடு சிங்கள மாகாணத்துக்கும் பிரயோகிக்கப்படக் கூடியதாகும். ஆனால் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பாராளுமன்றமும் கட்டுப்பட்டதாக இருக்கும் என்ற ஒரு பிரிவு அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும்.

இத்தகைய வழிமுறை மூலம் தான் பிராந்தியங்களின் சுயாட்சி பாதுகாக்கப்பட முடியும்.

எந்தவொரு நாடுமே தவிர்க்க முடியுமாயின் சமஷ்டி அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளாது இருக்கும். சமஷ்டி என்பது பல சட்டப் பிரச்சினைகளையும் தாமதங்களையும் பெரும் செலவுகளையும் உள்ளடக்கியதாகும். ஆனால் உள்நாட்டுப்

போர்களை தவிர்ப்பதென்பது இதை விடப்பெரிய செலவுகளைத் தவிர்ப்பதாகவே அமையும்.

நாம் தெரிவித்திருக்கும் யோசனையின் பிரகாரம் அமைக்கப்படக்கூடிய உயர் நீதிமன்றம் சமஷ்டி ஒற்றையாட்சி சிக்கல் நிலைக்கு தீர்வு காண்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றகரமான வழிமுறையாக இருக்க முடியும். இருக்கவும் வேண்டும்.

ஆனால், நாம் ஏற்கனவே கூறியிருந்ததைப் போன்று மீண்டும் உள்நாட்டுப் போரும் அராஜகமும் ஏற்படுவதை தடுக்க கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமானவையாகும்.

இவ்வாறு செய்வதன் மூலமாக நன்கு ஆயுத பாணியாக்கப்பட்ட நவீன இராணுவங்களினால் கூட இனக்குழுக்களின் சுதந்திரமான அபிலாசைகளையும் விருப்பங்களையும் அடக்கி யொடுக்க முடியாமல் இருக்கும். ஒரு இனக்குழு அதன் சுயநிர்ணய உரிமையை பிரகடனம் செய்வது தொடர்பாக தீர்மானம் மேற் கொள்வதையும் அதை அமுல் படுத்துவதையும் எதுவுமே தடுக்க முடியாது. எந்தத் தடையும் இருக்க முடியாது. எனவே இலங்கைத் தமிழச் சிறுபான்மையினரை பாதுகாப்புணர்வுடன் வாழ வைப்பதை மீளவும் உறுதி செய்து கொள்வதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியமானவையாகும்.

விசேடமாக அமைக்கப்படக் கூடிய உயர் நீதிமன்றமும் ஒரு கூட்டுத் தலைமை ஆட்சி பாணியில் முஸ்லீம் பெரும்பான்மை பிராந்திய சபை மீது யாழ்ப்பாணமும் கொழும்பும் கொண்டிருக்கக் கூடிய கூட்டு நியாதிக்கமும் கூட இது விடயத்தில் போதுமானவையல்ல.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக மேலுரிமை அதிகாரங்களைப் பாராளுமன்றம் கொண்டிருக்குமா? அதாவது, தமிழ் சுயாட்சி மாகாணமும் முஸ்லீம் சுயாட்சி மாகாணமும் நிறைவேற்றி நடைமுறைப் படுத்தும் சட்டங்களை கொழும்பு பாராளுமன்றம் ரத்துச் செய்து மேலுரிமையைச் செலுத்த முடியுமா? இதற்கான விடையை நாம் மேலே குறிப்பிட்டிருந்த உயர் நீதிமன்றத்தினால் நடைமுறைப்படுத்தக் கூடிய நியாதிக்கத்தில் ஓரளவுக்கு காணக்கூடியதாக இருக்கிறது.

தமிழ் சுயாட்சி மாகாணத்தையும் முஸ்லீம் சுயாட்சி மாகாணத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களின் இணக்க த்துடன் பாராளுமன்றம் அதன் (அந்த மாகாணங்களின் அதிகாரங்கள் தொடர்பான விவகாரங்களில்) மேலுரிமையை வைத்திருக்க வேண்டும் என்ற சட்டரீதியான ஏற்பாட்டுடன் பாராளுமன்றம் இந்த உரிமையை தன்னுடன் வைத்துக் கொள்ளலாம்.

இந்த வகையாக மத்திய பாராளுமன்றத்தின் சுயாதிபத்தியம் பேணப்பட முடியும். ஆனால், தமிழ் அல்லது முஸ்லீம் எம்பிக்கள் பதவியில் இருக்கும் அரசாங்கத்தினால் விலைக்கு வாங்கப்பட்டால் என்ன நேரும்?

அத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகுமேயானால் அதிலும் பாராளுமன்றத்திற்கான மேலுரிமையை தமிழ் மற்றும் முஸ்லீம் சுயாட்சி சபைகள் எதிர்க்குமேயானால் அந்த மேலுரிமை நடைமுறைப் படுத்தப்பட மாட்டாது.

எனவே பாராளுமன்றத்திற்கான அந்த மேலுரிமை மாற்றத்துக்கு ஆதரவாக வாக்களித்த தங்கள் பிராந்திய எம்பிக்கள் மீள அழைப்பதற்கு தமிழ் மற்றும் முஸ்லீம் சுயாட்சி சபைகள் பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானம் எடுக்கக் கூடியதாக சட்ட ஏற்பாடு இருக்க வேண்டும்.

பின்னர் சம்பந்தப்பட்ட தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

எந்தவொரு சுயாட்சி சபையினதும் சம்மதம் இன்றி பிராந்தியங்களின் இனவிகிதாசாரத் தன்மையோ எல்லைகளோ மாற்றியமைக்க ப்படக் கூடாது.

இது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாதுகாப்பு ஏற்பாடாகும்.

இந்த சட்டரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகளை பாராளுமன்றம் ரத்துச் செய்ய முடியுமா?

சுயாட்சி மாகாணங்களிலே நடத்தப்படக் கூடிய சர்வஜன வாக்கெடுப்பில் பெரும்பான்மையான வாக்காளர்களின் அங்கீகாரத்துடன் இத்தகைய அதிகாரத்தை பாராளுமன்றம் பெறக் கூடியதாக ஏற்பாடு செய்வது உகந்தது.

நிதி விவகாரங்களை எவ்வாறு கையாளுவது? நிதி ஆணைக் குழுவொன்று விசேடமாக அமைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு சுயாட்சி மாகாண சபையில் இருந்தும் (தமிழ், முஸ்லீம், சிங்களம்) விகிதாசார அடிப்படையிலான எண்ணிக்கையில் இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அமைய வேண்டும்.

இவ் ஆணைக்குழுவின் தீர்மானங்களும் விதப்புரைகளும் ஐந்தில் நான்கு பெரும் பான்மையினால் அல்லது ஏகமனதாக நிறைவேற்றப் படுவது விரும்பத்தக்கது. இந்த விதப்புரைகளுக்கு கொழும்பு அரசாங்கத்தின் நிதியமைச்சர் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும்.

அத்துடன் வெளிநாட்டு உதவியையோ அல்லது முதலீட்டையோ நேரடியாகவே நாடக்கூடிய உரிமை மாகாண அமைச்சரவைக்கு இருக்க வேண்டும்.

அரசாங்க ஊழியர்களின் நிலைமை எவ்வாறு? மாகாண நியாயாதிக்கத்துடன் தொடர்புடைய சகல விவகாரங்களைப் பொறுத்த வரையிலும் அரசாங்க ஊழியர்கள் மாகாண அமைச்சரவையின் கட்டுப் பாட்டிலும் மேற் பார்வையின் கீழும் இருப்பர்.ஏற்றுக் கொள்ளப்பட்ட நடை முறை விதிகளுக்கு உட்பட்ட விதத்தில் அவர்களை மாகாண அமைச்சரவை பதவி நீக்கம் செய்யவும் முடியும். மத்திய அரசாங்கத்தின் விவகாரங்களைப் பொறுத்த வரை அரசாங்க ஊழியர்கள் கொழும்பு அரசாங்கத்தின் உத்தரவுகளையே நிறை வேற்றுவர்.

இதே அரசாங்க ஊழியர்கள் சுயாட்சி மாகாணங்களினதும் மத்திய அரசினதும் கடமைகளைச் செய்ய முடியும். ஆனால், மாகாண அமைச்சரவையொன்று விரும்புமேயானால் அதன் சொந்தத்தில் அரசாங்க சேவையொன்றையும் நியமிக்க முடியும்.

ஒவ்வொரு மாகாண சபையினதும் ஆளுனர் சம்பந்தப்பட்ட மாகாணத்தின் மக்களினால் அல்லது மாகாண சபையின் உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட வேண்டும்.

அவசரகால அதிகாரங்களைப் பொறுத்தவரை எந்தவொரு சுயாட்சி மாகாணத்திலுமே அந்த மாகாண சபையின் விதப்புரையின்றி அவசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியாது.

மற்றும்படி கொழும்பு அரசாங்கத்தினால் எப்போதுமே அவசரகால நிலையை பிரகடனப்படுத்த முடியும்.


அவ்வாறானால், சுயாட்சி மாகாணம் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் காலவரையறையின்றி கொண்டு வரப்பட வேண்டும்.

இத்தகைய ஏற்பாடுகளுடனான அரசியல் அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு 5—7 வருடங்களின் பின்னர் தமிழ், முஸ்லீம் மாகாணங்களின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் சட்டரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த அரசியலமைப்பு தொடர்பாக எந்தவொரு சுயாட்சி மாகாணமாவது அதிருப்தி கொண்டிருக்குமேயானால் மாற்றங்களைச் செய்வதற்கு மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். இறுதியில் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் சுயாட்சி பிரதேசங்கள் பிரிந்து செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஆனால், இத்தகைய நிகழ்வுகள் இடம் பெறாதிருப்பதை உறுதி செய்து கொள்ளும் பொறுப்பு சிங்கள அரசாங்கத்திற்கே உரியது.

நன்றி

**வீரகேசரி சஞ்சிகை**

எழுதியவர்
பேராசிரியர் ஏ.ஜே.வில்சன்
(நியூபுரூன்ஸ்லிக் பல்கலைக்கழகம் கனடா)



# "கல் தோன்றி மண் தோன்ற முன்..."

**"கல் தோன்றி மண் தோன்ற முன்...".** என்ற கவியடிகள் தொடர்பான விவாதம் சங்கமம் இதழ்களில் தொடர்வதை அறிகிறோம். காலம் காலமாகப் பேசப்பட்டு வந்த விடயம் காலம் கடந்து விவாதிக்கப்படுகிறது. தொல்காப்பியம் அதன் வழிநூலான நன்னூல் உட்பட எந்தவொரு பழந்தமிழ் நூல்களிலும் காண முடியாத இக்கருத்து இடையிலேயே தோன்றியிருக்க வேண்டும். முதன் முதலில் யாரால் எப்போது எங்கே கூறப்பட்டது என்று கூறமுடியாத நிலையிலே இக்கவியடிகள் தற்போது பலவாறு திரிவடைந்து பலரால் பல விதமாகப் பயன் படுத்தப்படுகிறது. அதனாலேயே இவ்விவாதமும் தொடர்கின்றது. இக்கவி வடிவங்களில் சரியானது எது என்று ஆராய்ந்து தெளிவடையாது கருத்து வெளியிடுவது விவேகமாகாது.

"கல் தோன்றி மண் தோன்ற முன் தோன்றிய மூத்த தமிழ்க்குடி" என்ற கவியடிகளை எழுதி விவாதத்தை ஆரம்பித்த திரு.க.ஆதவன் அவர்கள் இது விஞ்ஞான உண்மைக்கு மாறானது என்றும் இதை மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடாது என்றும் கருத்து வெளியிட்டாரே தவிர கவிதையிலுள்ள தவறை ஆராயத் தவறி விட்டார். அவரைத் தொடர்ந்து எழுதிய திரு.முல்லையூ ரான் அவர்களும் திரு.உதி.சபாபதி அவர்களும் கவிதை யிலுள்ள கவித்துவத்தை ரசித்தார்களேயன்றி கவிதையைப் பற்றி ஆராயத் தவறி விட்டனர் என்பது எனது தாழ்மையான கருத்து.

**"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே**
**வாளொடு முன் தோன்றிய மூத்த குடி"**

என்ற கவியடிகளை எழுதி விவாதத்தைத் தொடர்ந்த திரு.துரை அவர்கள் தமிழ்ப் பேழையை ஆதாரம் காட்டியதோடு ஒவ்வொரு சொல்லுக்கும் சிறப்பான விளக்கமும் கொடுத்திருந்தார். பாராட்டுகிறேன். ஆனாலும் இக்கவிதையில் மூத்தகுடி என்ற வார்த்தையைப் பயன படுத்தியதை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. மனிதகுலம் தோன்றிப் பல ஆண்டுகளின் பின்பே மொழி தோன்றியது. அப்படியிருக்க மூத்த குடியைத் தமிழ்க்குடி என்றோ, தமிழின் தொன்மைக்கு உதாரணமாகவோ கூறுவது பொருத்த மற்றது என்பது எனது தாழ்மையான கருத்து. தமிழின் தொன்மை பற்றிக் கூறும் இக் கவியடிகளை நாம் ஆராயும் போது தமிழ் மொழி எவ்வாறு தோன்றியது என்பதையும் ஆராய வேண்டும்.

ஆர்ப்பரிக்கின்ற கடலலைகள் கரைகளிலுள்ள பாறாங்கற்களில் மோதுகின்ற போதும், வேகமாக வீசுகின்ற காற்று மலைகளில் மோதுகின்ற போதும் எழுகின்ற "ஓம்" என்ற இயற்கையொலியிலிருந்து பிறந்ததே தமிழ் மொழி. இவ்வியற்கை ஒலியைக் கேட்ட மொழியறிவற்ற மனிதர்கள் ஓம் என்று உச்சரிக்க ஆரம்பித்தார்கள். மிருகங்கள், பறவைகளின் ஒலியைக் கேட்டு அவற்றைத் தாங்களும் திருப்பி உச்சரித்தார்கள். உதாரணத்திற்குஹ காகம் கா கா என்று கத்தியதைக் கேட்டு அதைக் காகா என்று சொன்னார்கள். இது பின்பு காகம் என்று மருவியது. கிளி கீ கீ என்று கத்தியதைக்கேட்டு கீகீ என்று சொன்னார்கள். இது பின்பு கிளி என்று மருவியது. இவ்வாறுதான் தமிழ் மொழி தோன்றிப் படிப்படியாக வளர்ச்சியடைந்தது என்று புலவர் செந்துறை முத்து உட்பட பல தமிழறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். இவற்றை ஆதாரமாக வைத்துப் பார்க்கும் போது

தொடர்ச்சி...42 ம் பக்கம்

## ஏழரை...! – க.ஆதவன் –

இம்முறை பனிக்காலம் சற்று மோசமாகத் தானிருந்தது. எப்படா முடியும் இந்தக்குளிர் என்ற எதிர்பார்ப்பு பறவைகளிடத்தில் கூடக்காணப் பட்டது. அவற்றை வெளியே காண முடியவில்லை. ஒன்றிரண்டு பறவைகளைக் கண்டாலும் அவை பெரிதாகத் தம்முள் அலுத்துக் கொண்டன. சும்மா கூடக் குசலம் விசாரிக்க முடியாமல் சோம்பலால் இறக்கைகளை நன்றாக மூடிக் கொண்டிருந்தன. மரங்களோ சிலையாகி விட்டன. இலைகளை இப்போது துளிர்ப்பதில்லை என்று கங்கணங் கட்டிக் கொண்டன. மரம் என்று ஒன்று இருந்தால், அதற்கு கொப்பு, கிளை, அடிமரம், இலைகள், துளிர்கள், பிஞ்சு, பூ , சருகு பலவாறான சமாச்சாரங்களை உள்ளடக்கிய..... ஒரு ஆத்மாவாக இருக்க வேண்டாமா?

வெறுமனே ஒன்றும் இல்லாமல்.. ஏனோதானோ என்று... அடிமரத்தின் "மொக்கு"களில் கூட பனி படிந்தபடி... "பொந்து"கள் எல்லாமே அடைபட்டுப்போய், வான் நோக்கி கைகளை நீட்டும் ஒரு மலட்டுப் பிச்சைக்காரன் மாதிரி...

கிளைகளின் நுனியைக் கூட, இழுத்துப் போர்த்தபடி... போர்வை கூட ஏதாவது "கலர்"களில் இருந்திருக்கலாம். எல்லாம் ஒரே வெள்ளை. பின்னால் தெரியும் மேகமும், மேடும், மரநுனியும் எல்லாமே பனியால் மூடிய வெள்ளை. இது மரம், இது மேடு, இது மேகம் என்று சொல்லமுடியாதபடி வெள்ளை! பனி! ஐஸ்!

கடற்கரையைக் கேட்கத்தேவையில்லை. "நீலப்ப ட்டாடை" "நீலச்சேலை" என்பதெல்லாம் பொய். யதார்த்தமாய் நான் "வெள்ளைச்சேலை" தான் உடுத்திக் கொண்டிருக்கிறேன். என்மீது நீ நடக்கலாம், சறுக்கலாம், நீந்தத் தெரியாமலே என்னைக் கடக்கலாம் என்று கூறிய படி அது மோசமாகவே... ஆம். இம்முறை அந்தக்கடல் உறைந்து போயிற்று.

பனிக்காலம் என்றால் என்ன? கோடைகாலம் என்றால் என்ன? எனக்கு எப்பொழுது உலாப்போக வேண்டுமோ... அப்பொழுது நான் உலாப் போதல் வழக்கம். என்னை யாரும் தடுக் கமுடியாது. கடற்கரை உலா, என்பது எனக்குப் பிடித்தமான விடயம்.

"தலைக்கும், தொண்டைக்கும் ஏதாவது கட்டிக்கொண்டு போங்கோ, SUMMER க்குப் போடுற GLOUSE (கையுறை)ஐயே இப்பவும் போடுறியள். winterக்கென்று வாங்கின சாமானுகள் அப்பிடியே இருக்கு. போட்டு வந்து இருமிக் கொண்டு அதாலை இரத்தம் வருகுது... முச்சுவிடக் கஷ்டமாயிருக்குது.. என்று சொல்லப் படாது" என்ற என்னவளின் நச்சரிப்பையுந் தாங்கிக் கொண்டு உலா வந்த எனக்கு, இப்படி மிக மோசமாய் உறைந்து போன கடலைப் பார்க்க எரிச்சலாய் இருந்தது. எல்லாமே வெறுமையாய் இருந்தது. நான் "சிகரட்" குடிக்காமலேயே மூச்சுவிடும் பொழுது மூக்கினால் புகை விடுவது போல் ஆவி போனது மேலும்.

எரிச்சலாய்இருந்தது. "ஸ்கண்டிநேவியா" நாடு என்று வந்தாயிற்று. வடதுருவம் என்றும் சொல்கிறார்கள். இன்னும் இருமணி நேரம் "பிளேனில்" பறந்திருந்தால் "ICELAND" இல் இறங்கி அகதி வாழ்வை ஆரம்பித்திருப்பேன்.

இங்கே இந்த உறைந்துபோன கடலுடன் 7½ வருஷப் பழக்கம் எனக்கு7½ வருஷம்

என்றால் கொஞ்சக் காலமல்ல எதனையும் முழுமையாக புரிந்து கொள்ளக் கூடிய அவகாசம் ஆத்மாவை, உடலை, பழையவற்றைப் புரிந்து கொள்ள 7½ x 365 நாட்கள் போதுமானவை.

7½ x 365 x 24 x 60 x 60 என எனது கணங்கள் எப்படிக் கழிந்தன எனக் கணக்கிட்டுப் பார்க்கலாம்.

இதனால் தானே என்னவோ எனது "அப்பு" (அப்பாவின் அப்பா) சொன்னவர்7½ ச் சனியனைக் கடக்கிறது கஷ்டம் என்று.

சும்மா மரங்களையும் பேச விருப்பமில்லாத பறவைகளையும் மரத்துப்போன மரமாகிய மலட்டுக் கடலையும் துணைவியின் தூண்டுதலால் தொங்கிக் கொண்டிருக்கும் எனது over court ஐயும் மனதினுள் திட்டிக் கொண்டு நடந்து கொண்டிருந்தேன். (மூக்கிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது.)

எல்லாமே ஜடமாய்த் தெரியும் இந்த வெள்ளைக் காட்சியினூடே... கறுப்புக் "கோர்ட்" அணிந்த அவன் தெரிந்தான்.
"அவன்" என அவனைச் சொல்லக்கூடாது. "அவர்" எனச் சொல்லியிருக்க வேணும் என்பதைப் பின்னர் அறிந்து குட்டிக் கொண்டேன்.
நரைத்த தாடி மயிர் நுனிகளைக்கூட பாழாய்ப் போன "பனி" விட்டு வைக்கவில்லை. அந்த மரத்தின் கீழுள்ள "பெஞ்" சில் பனி மூடிய அந்த "பெஞ்" ஐ(**BENCH**) பனிப்பாறை என்று சொல்லலாம். அதில் குறைந்தது 1½ மணி நேரமாவது அவன் இல்லை "அவர்" இருந்திருக்கிறார்.

கண்களில் புருவங்களில் கூட பனித்துளிகள் படர்ந்திருந்தன. நிமிர்ந்து பார்த்தார் கிழவர். நான் எனது "பொக்கற்" றிலிருந்து ஒரு சிறிய போத்தலை எடுத்து அவரிடம் நீட்டினேன். அந்தப் புட்டியினுள் குளிருக்கு இதமாக இருக்கும் மது இருந்தது.

விறைத்துப் போனதால், நடுங்கியிருக்க வேண்டிய விரல்கள் நடுங்காமலேயே "புட்டி"யை வாங்கின.
"புட்டி"யைத் திறக்க முடியாமல் தத்தளித்தது. ஈற்றில் நானே திறந்து கொடுக்க வாயில் ஊற்றிக் கொண்டான்(ர்).

மிகுந்த சிரமப்பட்டுத் தோள்களைக் குலுக்கி நன்றி சொல்ல ஆசைப்பட்டார். "டெனிஸ்" காரர்கள் எப்பொழுதுமே நன்றி சொல்ல மறக்கமாட்டார்கள்.
எனது இந்த "டெனிஸ்" கிழவனாரும் எப்படியாவது அதைத் தெரிவிக்க முயன்றார்.

நான் அவர் அருகே உட்கார்ந்தேன். இந்த உறைகிற பனியில்... முதிர்கிற வயதில்... இங்கே என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன்.

"நான் தொலைத்து விட்டேன்" என்றார்.
"எதை?"
"எனது வீட்டை"
"வீடா..? அதையும் தொலைப்"
"உண்மைதான் தம்பி... (எனது "புட்டி" யிலிருந்து சிறியதை அருந்தி விட்டு) நீர் நினைப்பது போல இது பணக்கார நாடு அல்ல. நான் 70 வயதில் தெருத் தெருவாக அலைகிறேன்.

என்னிடம் இருப்பது ஒரு சின்ன வண்டில். அந்த வண்டிலுக்குள் நான் எனக்குத்

தேவையானவற்றை வைத்திருந்தேன். உங்களுடைய கீழைத்தேய கூட்டுக்குடும்பமுறை வாழ்வு இங்கே வாழமுடியாது. எனக்கென 3 மனைவியரும், 7 பிள்ளைகளும், 16 பேரப்பிள்ளைகளும், 3 பூட்டன்களும் உண்டு. இல்லை இருந்தார்கள். இருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியே சென்று விட்டார்கள் எங்களுடைய மேலைத்தேய வாழ்வு முறை அப்படியானது. அவரவரைத் தனியாக விட்டு விடுவது.
ஒரு வகையில் அது நல்லது தானே என்றேன். வேணுமென்றே "டெனிஸ்" பாஷையில் உள்ள கொச்சை அர்த்தத்தில்.

நல்லது தான்,
நானும் அவர்களும்,
அவர் அவர்களும்,
தனியாய், தனித்துவமாய்
இருப்பது நல்லதுதான்! ஆனபடியாத்தான் நான் எனது உடமைகளுடன் தெருவில் இறங்கினேன். எனக்கென ஒரு உலகை என்னுள்ளே சிருஸ்டித்துக்கொண்டு... நானே பிச்சை எடுத்து... செல்வம் கொழிக்கும் நாட்டில் பிச்சை எடுத்து வாழ்ந்தேன். வாழ்கிறேன். பணக்கார நாடென்பது வெறும் பணத்தினால் வருவதல்ல... மனதினால் வருவது என்றார்.

(நானும் "புட்டி"யில் சிறிதை அருந்திவிட்டு) சரி நீங்கள் உங்கள் உடமைகளை இழந்துவிட்டீர்கள். அதற்காகச் சில கருத்துக்களைச் சொல்கிறீர்கள். உங்களுக்கென நீங்கள் வைத்திருந்த அந்தப் பொருட்களைக் கூட அவர்கள்....

யார் அபகரித்தார்கள் என்பது இங்கு பிரச்சினை இல்லை. எனது இந்தச் சின்னஞ் சிறிய வண்டிலை எதற்கு உபயோகப் படுத்தப் போகிறார்கள்? "அவர்கள்" என்று நீர் சொன்ன அவர்கள் வேண்டாமென்று கழித்து வைத்ததை நான் வைத்திருந்தேன் என்பதுதான் உண்மை.

கிழவர் உண்மையிலேயே தேடுகிறார். இந்த நல்ல கிழவர்மார் எப்பொழுதுமே எதையாவது தேடிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு காலநிலை எதுவும் செய்வதில்லை.

பனி என்றால் என்ன?
மழை என்றால் என்ன?
கோடை என்றால் என்ன?
□ □ □

அப்பு......
வேர்க்குது எல்லே! இந்த வெய்யிலுக் கையும் புழுதியிக்கையும் அதைத் தேடத்தான் வேணுமோ... என்றேன்.

"எதைத் தேடுறன் சொல்லு பாப்பம்" என்றார் கடைக்கண்ணால் என்னைப் பார்த்து விட்டு.
ஏனப்பு? எந்த நாளும் தேடுறியள்! கிடைக்காது! தேடினால் எதுவும் கிடைக்காது. சும்மா அதைப் பற்றி யோசிக்காமல் வேறை ஏதன் ஒண்டை யோசிச்சுக்கொண்டு நடந்தியள் எண்டால் சும்மா காலடியிலையே வந்து தட்டுப்படும் என்றேன் எனது மழலையில்... குருட்டு நம்பிக்கையில்.

அப்பு அந்த வெய்யிலில் எப்போதுமே தேடிக் கொண்டிருந்தார். ஒரு பெரிய கத்தியை ஆரிடமிருந்தோ இரவல் வாங்கிக் கொண்டு வந்தார். நாக்கைக் கடித்தபடி எமது வளவின் முன்பக்கம் அழகாக வளர்ந்திருந்த பாவட்டச் செடியை வெட்டினார். கடைக்குப் போட்டு வந்த அம்மா, ஏன் உதுகளை வெட்டுறியள்? என்று கேட்டா.

"ஒரு வடிவுக்குத்தான்"என்று சொல்லி விட்டு மீண்டும் வெட்டத் தொடங்கினார். வெட்டிக்கொண்டிருந்தவர் அம்மா வீட்டுக்குள் மறைந்ததைக் கண்டதும் பாவட்டம் பாத்தியில் ஏதோ தேடத் தொடங்கினார்.

(எனக்கு மீசை முளைத்து விட்டது இப்பொழுது) ஒரு நாள் அப்புவை நேரேயே மடக்கினேன்.

"தயவு செய்து சுமார் 7½ வருடங்களாக எதைத்தேடுறியள் எண்டு சொல்லவேணும். இல்லாட்டிப் பொலிசிலை புடிச்சுக் குடுத்திடுவன்" என்றேன்.

அப்பு POLICE என்ற சொல்லைக் கேட்டவுடன் மிரள ..மிரள... என் தங்கையைப் பார்த்துவிட்டு, பாக்குவெட்டி என்றார்.

நான் அறிஞ்சநாள் தொட்டு அப்பு பாக்கு வெட்டியைத் தேடிக்கொண்டிருந்தார்.

§ § §

உங்கனுடைய வண்டிலை எடுத்தவர்கள் அதை உங்களிடம் திருப்பித்தருவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?' என்று கேட்டேன் அந்த நீலக்கண் கிழவரிடம். இல்லை' என்றார்.

அப்ப ஏன் தேடுறியள்?'

கிழவர் வெள்ளைப்புகையில் பெருமூச்சு விட்டுச்சொன்னார். தம்பி, இந்த வண்டிலை நான் சுமார் 7½ வருடங்களாய் வைத்திருநதேன். அது தொலைந்து விட்டது. என்னுடன் அது வாழ்க்கை நடாத்தியிருக்கிறது. ஒவ்வொரு கணமும் நானும் அதுவும் அதனுள்ளே உள்ள பொருள்களுமாய்... வாழ்ந்திருக்கிறோம். நாம் வாழ்ந்த கணங்களை நாம் மறக்க முயன் றாலும் அவை எம்முன் கொழுவிக்கொண்டே கொழுக்கி போல், தூண்டில் போல் இதயத்தினுள் ஏதோ ஒன்று துருத்திக்கொண்டு நிற்பது போல் நிற்கும்.

இந்த நினைவு...
இந்த தூண்டில்....
இந்தக் கொழுக்கி......

ஆழ்கடலில்... சமுத்திரத்தில்.. தொலைந்து விட் டது. அது தொலைந்தே விட் டது என்று எனக்குத் தெரியும். கிடைக்காது என்றும் எனக்குத்தெரியும். எனினும் அதைத் தேடுவதில் சுகம் இருக்கிறது. அதனுடன் வாழ்ந்த நினைவுகளை அதனைத் தேடுவதில் மீட்கிறேன்.

ஒரு ஆலாபனை போல..
ஒரு கீர்த்தனை போல...

எத்தனை தரம் நாம் பல்லவியைத் திரும்பத் திரும்பப் பாடுகிறோம்... சலிக்க வில்லைத்தானே!

அதே போல் தான் இதுவும். அதனை எண்ணுவதில் மகிழ்கிறேன். மகிழ்கையில் எண்ணுகிறேன்' என்றார்.

எனது அப்பு பாக்குவெட்டியைத் தொலைத்து விட்டு 7½ வருடங்களாய்த் தேடிக் கெண்டிருந்தார்.

இந்த வெள்ளைக் கிழவனுக்கும் அவருக்கும் அதிகளவு தூரம் வித்தியாசம் இல்லை.

அவரவர்கள் வாழ்வுப்படி அவரவர்கள் தேடிக் கொண்டு தான் இருக்கிறார்கள். யாருக்காவது தேடிய பொருள் கிடைத்ததா? கிடைத்தவர்கள் தம்பாட்டில் வெறுமனே இருக்கிறார்களா?

கிடைக்காதவர்கள் தான் ஏதோ கிடைத்து விட்டதாகப் பம்மாத்தும் விளம்பரமும் செய்கிறார்களா?

ஏதோ ஒருவாறு என்னுள் வாதம் வரலாயிற்று. வீடு வந்தபோது என் மனைவி கேட்டாள். முந்தி ஒருநாள் இப்பிடி "உலா"ப் போட்டு வரேக்கை தானே உங்கடை

மோதிரம் விழுந்தது. அதைத் தேடிப் பார்த்திருக்கலாந்தானே!

"ஓவர்கோட்டை" ஸ்ராண்டில் மாட்டிவிட்டு வந்து அமைதியாக சோபாவில் குந்திக் கொண்டேன்.

□ □ □

எனக்கு 7½ வயதாகும் பொழுது தொடங்கி 15 வயது வரும் பொழுது அப்பு இறந்து போனார். பாக்குவெட்டியை அவர் கண்டு பிடிக்கவில்லை.

அவரது நினைவுநாளுக்கு வீட்டுக்கு முன்னால் பந்தல் போடும் பொழுது பாவட்டஞ் செடிகளை முற்றாகவே அகற்ற வேண்டி வந்தது. அப்பொழுது வேர்களுக்கடியில் சாடையாகத் துருப்பிடித்த அந்த பாக்குவெட்டியைக் கண்டேன். அதுபற்றி யாரிடமும் பிரஸ்தாபிக்க ஏனோ என்மனம் இடங் கொடுக்கவில்லை. 7½ வருடங்களாய் தேடிக் கொண்டிருந்த அப்புவின் கண்களுக்கு அவர் இருக்கும் காலங்களில் தட்டுப்பட்டிருக்கக் கூடாதா என்ற எரிச்சல் பாக்குவெட்டியின் மேல் வந்தது. ஒருவரிடமும் சொல்லாமல் .... அப்புவை நினைத்தபடி அடிவளவில் இருந்த பாழுங் கிணற்றினுள் அதை விட்டெறிந்தேன்.

□ □ □

வழமைபோல இன்றும் "உலா"ப் போக ஆயத்தமானேன். மனைவி வாசலில் வந்து "குட்பை" என்றாள். அதன் அர்த்தம் மோதிரத்தை மீண்டும் தேடிப் பாருங்கள் என்பதாகவும் இருக்கலாம்.

அதே மரங்கள்... அதே வெள்ளை... அதே உறைந்து போன வெள்ளைப் பளிங்குக்கடல்.

அந்தக் கிழவர் இருந்த "பெஞ்சை"ச் சுற்றிச் சில சனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். சற்று தள்ளி ஒரு "அம்புலன்ஸ்" வண்டியும் நின்று கொண்டிருந்தது.

நான் கிட்டப் போகவில்லை. வெண்மையான உடையணிந்த "அம்புலன்ஸ்" வண்டிக்காரர் "ஸ்ரெச்சரில்" ஒரு உருவத்தை கிடத்தி "அம்புலன்ஸ்"வண்டியை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

"கோர்ட்பை"யிலிருந்த மதுவை அண்ணாந்து பார்த்தபடி அருந்தினேன்.

வீடு நோக்கி நடக்கையில் அந்த மலட்டு மரங்கள் மேலும் வக்கிரமாய் நிற்பது போல் பட்டன.

7½ வருடமாக நானும் என் நாட்டைத் தொலைத்து விட்டேன்.

7½ வருடங்கள் "டெனிஸ்" நாட்டில் வாழ்ந்தால் அந்த நாட்டுப் பிரஜா உரிமை கிடைக்கும்.

பனிக்காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது.

மோதிரம் தொலைந்து போய 7½ நாட்கள் தானே ஆகின்றன என அவளுக்குச் சொல்ல வேண்டும்.

நன்றி!
புலம்பெயர்ந்தோர் கதைகள்
மகாஜனா வெளியீடு (பாரீஸ்)

# அருவுருவம்

முல்லையூரான்

நாற்புறமும் வெள்ளைச்சுவர்கள். தலைமாட்டுச்சுவரில் ஒரு நீள்சதுரவடிவத்தில் கறுப்புப்பலகையில் குறுக்குமூலைவெட்டாக ஒரு வெண்கோடு இருந்தது.அதைப்பார்க்க பயத்தையும்,சோகத்தையும் தந்தது. பெட்டியைச்சுற்றி ஒவ்வொருவராகச்சென்று அஞ்சலிசெலுத்திக்கொண்டிருந்தனர். கால்மாட்டிலும் தலைமாட்டிலும் குத்துவிளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.சாம்பிராணிப்புகை மண்டபத்தை நிறைத்து பன்னீர்நெடியுடன் நாசிலேறியது.வேட்டியுடுத்தபடி பரமண்ணா சிவபுராணத்தை பாடிக்கொண்டிருந்தார்.குளிருக்கஞ்சி போட்டிருந்த பரமண்ணாவின் சப்பாத்துக்காலடியில் அஞ்சலி மலர்கள்சில உதிர்ந்துகிடந்தன. ஏராளம் மலர்வளையங்கள் பெட்டியைச்சுற்றியும் வாசலிலும் கிடந்தன.அம்மண்டபத்தில் ஏராளம் தமிழர்கள் குழுமியிருந்தனர்.எல்லோரும் ஒருவரும் அவனுக்கு உறவுக்காரர்கள் இல்லையெனினும் சிலர் அழுதனர். பலரும் கைகளைக்கட்டியபடி சோகம் ததும்ப நின்றனர்.இவர்களுள் ஒரு டனிஸ்காரி ஒருத்தியும் சிவந்தகண்களுடன் வெள்ளைநிறஆடை உடுத்தியபடி விம்மிவிம்மி அழுதுகொண்டிருந்தாள். சிவபுராணம்பாடிக்கொண்டிருந்த பரமண்ணர் யார் இவள்? என்ற ஆர்வமிகுதியில் பாடியவரிகளையே அடிக்கடி திரும்பவும் திரும்பவும் பாடிக்கொண்டிருந்தார்.ஒதுக்கப்பட்ட ஒருமணித்தியாலவேளைக்குள் சடங்கு முடிந்துவிடவேண்டுமென்பதில்;கையில் சில அஞ்சலி நோட்டீசுகளுடன் சில இளைஞர்கள் ஆரவாரப்பட்டுக்கொண்டிருந்தனர்.

மண்டபத்துக்குவெளியே ஒருமேசையில் சோடாப்பெட்டி ஒன்றைச் சுற்றிச்சிலர் நின்று கதைத்துக்கொண்டிருந்தனர்.

"அனியாயச்சாவு.........." இது கரன்.

"குடியும் கூத்தும் கும்மாளமும்......கடனேறாமல் என்னசெய்யும்" இது ரவி.

ஒன்றுமே பேசாமல் கையில் சுருட்டியபடி வைத்திருந்த அஞ்சலிநோட்டீசில் கவனத்தைதிருப்பினான் ராஜன்.

என்னதான் அவன் செய்தாலும்.... அகதியாய்வந்து அதுகும் வெளிநாட்டில.... ...........அவன்ரவிசயத்த வடிவாச்செய்துவிடுவம். இது இன்னொருவன்.

இவன் ஊருக்கும் காசுகீசு அனுப்புறேல்ல.......அதுகள்தான் பாவம்......என இழுத்தபடி அருகில்வந்தார் சிவபுராணம் பாடிமுடித்த பரமண்ணர்.

அதுதான் நாங்கள் காசுசேர்க்கப்போறம்...........இது கரன்.

அதுசரிதம்பிமார் பொலிஸ் முறைப்பாடு எந்தளவில.......ஊதியசிகரட்டை காலால்மிதித்தபடி கதையோடுசேர்ந்துகொண்டார் புங்குடுதீவுத்திருவண்ணர்.

இவன் பெற்றோல் வாங்கின...செற்காரன் சொன்னவனாம் இவனோட இரண்டு டனிஸ்காரங்களும் வந்தவங்களாம்.....ஆக்களுக்கு வெறியுமாம்...இது கரனின் பதில்.

நாசியளாய்இருக்குமோ? ........இது திருவண்ணரின்...மர்ம ஊகம்.

நல்ல நல்ல சாமானெல்லாம் வைச்சிருந்தவன்..அதுகளையும் ஊருக்கு அனுப்பிவிடுங்கோ இது பரமண்ணரின் புத்திமதி.

அதுசரி இவன்பொடியன் இருந்த வீடு......என்னமாதிரி வாடைக்கு எடுக்கலாமோ........இல்ல கேட்டன்... என்ர மருமோன்பொடியன் ஒருத்தன் இப்பதான்வந்தவன், கதைக்கக்கூடாதநேரத்தில் கதைத்தகுற்றஉணர்வால் தடக்குப்பட்டார் திருவண்ணர்.

ஒருவரும் ஒன்றும்பேசாது நின்றனர்.

சவத்தை எடுக்கப்போறாங்களாம்......உள்ள வாருங்கோ........என்ற குரலுடன் எல்லோரும் மீண்டும் மண்டபத்தில் கூடினர்.

கறுப்பு கோர்ட் அணிந்த ஆறுபேர் பெட்டியைச்சுற்றி நிற்க ஒருவன் பெட்டியைமூடுவதற்காக மூடியை எடுத்தான்.

இதுவரை அழுதுகொண்டுநின்ற அந்த டனிஸ்கார இளம்பெண் அருகில் வந்தாள். வந்தவள் தனது கையில் வைத்திருந்த அந்த ஒற்றை ரோஜாவை அந்த இளைஞனின் மூடிக்கிடந்த உதடுகளில் வைத்தாள்.அந்த ஒற்றை ரோஜாவைத்தொடர்ந்து பெட்டி மூடப்பட்டது.

அந்த டனிஸ்கார இளம்பெண்ணின் ஓ.....வென்ற குரல் அந்த மண்டபத்தை நிறைத்துஓயவும்............சவம் கறுப்புக்காரில் மறைந்தது.

வந்திருந்தவர்கள் மெல்லமெல்ல கலைந்தனர்.

இப்போதுதான் நிர்மல் அங்கு வந்தான்.தோளில் ஒரு பை தொங்கியது. முகத்தில் சிரிப்பு கீறியிருந்தது.

அம்மணலில் குனிந்து ஒருபிடிமணலை அள்ளி சவம்போனதிசைநோக்கி எறிந்துவிட்டு காறிஉமிழ்ந்தான்.

"போய்ச்சேரட்டும் நாயள்"..........என்றபடி திரும்பிநடந்தான்.

ஆம்!ராம் செத்துப்போனான். பெற்றோலூற்றி தன்னைதீமூட்டியதாக செய்தி.

தொடரும்.............



## டென்மார்க் அரசியலில் மீண்டும் ஸ்திரமற்ற அரசாங்கம்!

டென்மார்க்கில் கடந்த மாதம் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் சோஷலிச ஜனநாயகக் கட்சி (Socialdemokratiet) தலைமையிலான கூட்டு அரசாங்கம் பதவி ஏற்றுள்ளது. இக் கூட்டு அரசாங்கம் ஓர் உறுதியான பெரும்பான்மையைக் கொண்டிராமல் சிறுபான்மை அரசாக பதவி ஏற்றிருப்பது பலரிடையே மீண்டும் ஒரு தேர்தல் வருமா? என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட அரசாக இருக்க வேண்டுமானால் குறைந்தது 90 ஆசனங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தற்போது பதவி ஏற்றுள்ள அரசாங்கம் மொத்தம் 76 ஆசனங்களை மட்டுமே கொண்ட சிறுபான்மை அரசாக உள்ளது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் மொத்த ஆசனங்கள் 179ல் பின்வரும் முறையில் அரசியற் கட்சிகள் மக்களால் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| Socialdemokratiet | (S) | 63 |
| Socialistisk Folkeparti | (SF) | 13 |
| Venstre | (V) | 44 |
| Konservative Folkeparti | (KF) | 28 |
| Radikale Venstre | (RV) | 8 |
| Centrum-Demokraterne | (CD) | 5 |
| Fremkridtspartiet | (FP) | 11 |
| Enhedslisten | (EL) | 6 |
| Uden for partierne | (UL) | 1 |

மேற்படி தேர்தல் முடிவுகளில் இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் கொண்டிருந்த கிறிஸ்தவ மக்கள் கட்சி (Kristelig Folkeparti) முற்றாக பாராளுமன்றத்தில் இருந்து ஒதுக்கப்பட்டுவிட்டன. பதிலுக்கு பல புதிய முகங்கள் பாராளுமன்றத்தில் அடியெடுத்து வைத்துள்ளன.

**தற்போதுள்ள கூட்டு அரசாங்கம் பின்வரும் முறையில் இணைந்துள்ளன.**

| | | |
|---|---|---|
| Socialdemokratiet | (S) | 63 |
| Radikale Venstre | (RV) | 8 |
| Centrum-Demokraterne | (CD) | 5 |
| | | 76 |

ஆதரவுக் கட்சிகள்:

| | | |
|---|---|---|
| Socialistisk Folkeparti | (SF) | 13 |
| Enhedslisten | (EL) | 6 |

ஆதரவுக் கட்சிகளான SFம், ELம், Socialdemokratiet கட்சியின் தலைவரான Poul Rasmussenஐ பிரதமராக தெரிவு செய்ய ஆதரவு செய்தன. ஆனால் இவ்விரண்டு கட்சிகளும் அரசாங்கத்தில் இணையவில்லை. இதனால் தற்போதுள்ள சிறுபான்மை அரசாங்கம் ஒவ்வொரு அரசியல் முடிவுகளை எடுப்பதற்காக பெரும்பான்மை ஆதரவு தேடி ஏனைய கட்சிகளுடன் பரஸ்பர பேச்சு வார்த்தைகளில் அவ்வப்போது ஈடுபட வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலையில் உள்ளது. இதனால் இச்சிறுபான்மை அரசு எந்நேரத்திலும் பதவி இழக்கும் ஆபத்தான சூழ்நிலையில் உள்ளது.

நடந்து முடிந்த தேர்தலில் பல முன்னணி கட்சிகள் தமது பல இடங்களை இழந்துள்ளன. இதற்கு மாறாக Venstre கட்சி முன்னோக்கி கடந்த தேர்தலில் பெற்ற ஆசனங்களை விட அதிக ஆசனங்களை இத் தேர்தலில் பெற்றுள்ளது. இதற்கு காரணம் இளந்தலைமுறையினரில் பெரும்பான்மையினர் இக்கட்சியை ஆதரித்துள்ளன. இவ்வாதரவு வெறும் புயலே தவிர, எந்தவித அரசியற் காரணமும் இல்லையென பல அவதானிகள் கருதுகின்றனர். பல Konservative Folkeparti ஆதரவாளர்களும் தமிழர் வழக்கின் பின் Venstreஐ ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர். இதனால் Konservative Folkeparti பல ஆசனங்களை இத் தேர்தலில் இழந்துள்ளன.

இத் தேர்தலில் இன்னுமொரு புதிய திருப்பம் என்னவெனில், Socialdemokratietம், Socialistisk Folkeparti யும் சில ஆசனங்களை இழந்துள்ளன. இதற்கு காரணம் முன்னைய கம்யூ னிஸ்ட் கட்சியில் இருந்த பல பிரபல உறுப்பினர்கள், கம்யூ னிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டதும் மேற்படி இரு கட்சிகளும் இணைந்து கொண்டதுடன் பின்னர் இத் தேர்தலில் பலருடன் இணைந்து Enhedslisterஆக போட்டியிட்டு 6 ஆசனங்களைப் பெற்றுள்ளன. மற்றுமொரு புதிய முகம் ஜாக்கப் கவ்கோ தனியாகப் போட்டியிட்டு Århus Amtல் வெற்றி பெற்றுள்ளார். இவர் நகைச்சுவையாளரும், விளம்பர கதாநாயகனுமாவார். இவரது வெற்றியினால் Fremkridtsparti தனது ஒரு ஆசனத்தை இழக்க நேரிட்டுள்ளது.

இவ்வாறு நடந்த தேர்தலில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் எதிர்காலத்தில் Socialdemokratietம், Venstreம் இரண்டு பெரும் முன்னணி கட்சிகளாக உருவகமெடுப்பதையும் சிறுசிறு கட்சிகள் சங்கமமாகிப் போகும் நிலையும் வளர்கின்றன என சிலரின் கருத்து. இதற்கு எடுத்துக்காட்டாக கடந்த தேர்தலில் கம்யூ னிஸ்ட் கட்சியும், இந்தத் தேர்தலில் கிறிஸ்தவ மக்கள் கட்சியும் உதாரணம். தற்போது Fremkridtspartiக்குள் எழுந்துள்ள தற்போதைய பூ கம்பம் அடுத்த தேர்தலில் அவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்குமா? என்பது ஒரு கணிப்பு

ரி.கே.தாசன்.
ஈ-காஸ்ட்

# அன்புப் பாதை !

நாடும்! அழிகிறது!
நம்மினமும்! அழிகிறது!
பாடுபட்டு! வளர்த்த – நம்
பரம்பரையும்! அழிகிறது!
எதிரியின்! எண்ணத்தில்....! ஒரு
ஏற்றமும்! தெரிகிறது....! அதனால் தமிழா!
பகைதனைச் சாடு! வெல்லு! நமக்குள் கூடவே!
அன்புப் பாதையை! நீயும் போடு....!

நம் முன்னோர்! சரித்திரங்கள்!
நம் முன்னே பாடங்கள்!
வேற்றுமையில்! தொடர்ந்து விட்ட....!
வேதனைகள்! எத்தனையோ! எத்தனையோ....!
எண் திசையும்! திரும்பிப் பார்....!
ஏற்பதில் அது கூறும்! அதனால் தமிழா!
பகைதனைச் சாடு! வெல்லு....! நமக்குள் கூடவே!
அன்புப் பாதையை! நீயும் போடு....!

களத்தினில்! நிற்போரல்ல! தாயின்
கருவினில்! இருப்போர் தானும்! நம்
எதிரியை வென்று! நமக்கோர் நாட்டை!
எடுக்கவே! எண்ணுகின்றார்!
மக்கள் சக்தியே ஆயுதமாய்....!
மதித்து நாம் களத்தை நோக்க! – தமிழா!
பகைதனைக் சாடு வெல்லு – கூடவே!
அன்புப் பாதையை நீயும் போடு....!

வேற்றுமை தன்னில் ஒரு!
ஒற்றுமை! நீயும் தேடு!
சாற்றிடு! பறை முழங்கு! – நம்மவர்
நாடுவர்! எதிரிப்படையை!
தேடியே அழிக்கும் படையாய்....!
ஓடியே வந்து நிற்பர்! அதனால்! தமிழா!
பகைதனைச்சாடு! வெல்லு! கூடவே! நமக்குள்! தமிழா!
அன்புப்! பாதையை! நீயும் போடு....!

தலைமைகள்! நமக்கெதற்கு....! ?
தமிழர்! விடுதலை! தானே வேண்டும்!
போதனை நமக்கெதற்கு....!?
தமிழர் வேதனை தீரவேண்டும்....!
அடம்பன்! கொடி போல....! நாம்
அனைவரையும்! அணிதிரட்டி....! தமிழா!
பகைதனைச்சாடு! வெல்லு....! கூடவே!
அன்புப் பாதையை! நீயும் போடு....!

தற்கொடைப்! படையாய்! முழுத்
தமிழரும்! மாறவேண்டும்!
எரிந்திடும்! நெருப்பாய் மாறி....! நம்
எதிரியை! அழிக்க வேணடும்!
எம்தமிழ் அன்னையின்! அரியணையை....!
எம் சந்ததி! காணவேண்டும் அதற்காக! தமிழா....!
பகைதனைச்சாடு! வெல்லு....! கூடவே!
அன்பு பாதையை! நீயும் போடு....!

நமக்கொரு! பகைவன்! உண்டு! – ஆனால்!
நமக்குள்ளே! பகைமை வேண்டாம்! நம்
ஏறிய! வண்டிக்கு! சக்கரம்!
எதிரியாய்!இருகக்வேண்டாம்!
அண்ணன்! தம்பியின்! சாடலாலே! தமிழ்அன்னைக்கு
அன்றைய! திரௌபதை! நிலையும் வேண்டும்!
வேப்பிலைச்சாறய்! மக்கள்!.... மன
வேதனை! நீள ணேண்டாம்!
தேன் தோடை சாறாய் மாறி – தமிழர்!
தேறுதல்! காண! வேண்டும்!.... ஆகவே!
பகைதனை! சாடு வெல்லு....! கூடவே! தமிழா!
அன்புப் பாதையும்! நீயும் போடு....!

எத்தனை! பலமிருந்தும்! எம்முள்!
எம்முள்! வேற்றுமை! வளர்ந்துவிட்டால்!
நோய் கொண்ட! பயிரைப்! போல....! நம்
நோக்கமும்! பாழாய்ப்போகும்!
காற்றினில்! அள்ளப்பட்ட!
கப்பலாய்! பயணம்! மாறும்!....எனவே! தமிழா!
பகைதனை! சாடு! வெல்லு....! கூடவே!
அன்புப்பாதையை! நீயும்போடு....!

நன்றி

வணக்கம்

வேலணையூர் பொன்னண்ணா

# எட்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

"தாய் எழில் தமிழை – எந்தன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியில் காண
இப்புவி அவாவிற்று" – என்னும்

பேரார்வம் ஈழம் தந்த பேரறிஞர் வணபிதா அமரர் தனிநாயகம் அடிகளார் உள்ளிட்ட உலகத்தமிழ் அறிஞர்களிடம் எழுந்தது. இவ்வறிஞர்கள் உலகளாவிய நிலையால் பல்வேறு நாடுகளில் இக் கொள்கை அறத்தோடு மாநாடு நிகழ்த்திட, உலகத் தமிழாராய்ச்சி அமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென 1960இல் தீர்மானித்தனர். 1964இல் இந்தியத் தலைநகரான புதுடில்லியில் அனைத்துலகக் கீழைத்தேய மொழியறிஞர் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் ஒன்று கூடிய தமிழறிஞர்கள் உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தை நிறுவினர். பல்வேறு நாடுகளில் தமிழாய்வு நிகழ்த்தும் அறிஞர் பெருமக்களை ஒருங்கிணைப்பதும், தமிழாய்வுக்கு ஊக்கமூட்டுவதும், அமைப்பின் நோக்கங்களாகும்.

1966இல் முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் கோலாகலமாக நடந்தேறியது. 1968இல் இரண்டாவது மாநாடு தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் தமிழ்த் தாயின் தவப்புதல்வர் பேரறிஞர் அண்ணா அமைப்பில் அலங்காரம் பெற்றது. 1970இல் மூன்றாம் மாநாடு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் பாரிஸில் ஐரோப்பியர்தம் பாராட்டுதலுக்கு மத்தியில் இனிது நடந்தேறியது. 1974இல் நான்காம் மாநாடு ஈழத்தில் பல சோகச் சம்பவங்களைத் தாங்கி ஈழத் தமிழ் இளைஞர்களை விழிப்படைய வைத்து நிறைவேறியது. 1981இல் ஐந்தாம் மாநாடு மதுரையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் ஆட்சியில் நடைபெற்றது. 1987இல் ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் மீளவும் நடைபெற்றது. 1989இல் மொரசியஸ் தீவில் மிகவும் சிறப்பாக நிகழ்ந்தது.

1995ஆம் ஆண்டு தை மாதம் எட்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தமிழகத்தில் தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது.

– பாலபண்டிதர் கே.ஜெயக்குமார்.



## இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையத்தின் விசேட அறிவித்தல்

இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையத்தினரால் 8.10.94ம் திகதி நடாத்தப்பட்ட வாணி விழாவிலே நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட சிறுவர்கள், சிறுமியர்களுக்கும், பெரியோர்களுக்கும், நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கியோர்களுக்கும், இவ் விழாவை அமைதியாக இருந்து பொறுமையுடன் கண்டு களித்து உற்சாகப்படுத்திய பொது மக்களுக்கும், இவ் விழாவை நடாத்துவதற்கு உதவி புரிந்த இளைஞர்களுக்கும், மற்றும் அனைவருக்கும் இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையத்தினர் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

அத்துடன் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு எதிர் வரும் தை மாதம் நடைபெறவுள்ள 11 நாள் திருவிழாவை அடியார்களுக்கு வழங்குவதாக தீர்மானித்துள்ளோம், ஆகவே இவ் விழாவை தனிப்பட்ட முறையிலோ, அல்லது குழுக்களாகவோ சேர்ந்து செய்ய விரும்புவோர் முன் கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும், அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இங்ஙனம்
இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையம்
நிர்வாக சபை

### November கார்த்திகை மாதத்தில் வரும்இந்துமத விசேடங்கள்

| கிழமை | November (ஆங்கிலம்) | ஐப்பசி (தமிழ்) | விசேஷங்கள் |
|---|---|---|---|
| செவ்வாய் | 1.11.94 | 15 | பிரதோஷ விரதம் |
| புதன் | 2.11.94 | 16 | தீபாவளி |
| வியாழன் | 3.11.94 | 17 | அமாவாசை விரதம் கேதாரகௌரி விரதம் |
| வெள்ளி | 4.11.94 | 18 | கந்தசஷ்டிவிரதாரம்பம் |
| ஞாயிறு | 6.11.94 | 20 | சதுர்த்தி விரதம் |
| செவ்வாய் | 8.11.94 | 22 | கந்த சஷ்டி விரதம் |
| செவ்வாய் | 15.11.94 | 29 | பிரதோஷ விரதம் |

கார்த்திகை
(தமிழ்)

| | | | |
|---|---|---|---|
| வியாழன் | 17.11.94 | 1 | பூரணை விரதம், சர்வாலயதீபம் (வீடுகளில் தீபம்) |
| வெள்ளி | 18.11.94 | 2 | திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், விஷ்ணுவாலயதீபம் விநாயக விரதாரம்பம் |
| புதன் | 30.11.94 | 14 | பிரதோஷ விரதம் |
| வெள்ளி | 2.12.94 | 16 | அமாவாசை விரதம் |
| செவ்வாய் | 6.12.94 | 20 | சதுர்த்தி விரதம் |
| வியாழன் | 8.12.94 | 22 | விநாயக சஷ்டி விரதம் |
| சனி | 10.12.94 | 24 | உதயத்தின் முன் திருவெம்பாவை பூஜாரம்பம் |
| வியாழன் | 15.12.94 | 29 | பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம் |

மார்கழி
(தமிழ்)

| | | | |
|---|---|---|---|
| சனி | 17.12.94 | 2 | பூரணை விரதம் |
| ஞாயிறு | 18.12.94 | 3 | இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகம் (நடேசரபிஷேகம்) |
| திங்கள் | 19.12.94 | 4 | உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் (திருவெண்பாவை முடிவு) |
| வெள்ளி | 30.12.94 | 15 | பிரதோச விரதம் |

January
(ஆங்கிலம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | 1.01.95 | 17 | அமாவாசை விரதம் |
| புதன் | 4.01.95 | 20 | சதுர்த்தி விரதம் |
| வியாழன் | 12.01.95 | 28 | சுவர்க்க வாயில் ஏகாதாசி விரதம, கார்த்திகை விரதம் |
| சனி | 14.1.95 | 30 | சனிப்பிரதோஷ விரதம் |

தை
(தமிழ்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | 15.1.95 | 1 | தைப் பொங்கல் |

www.padippakam.com




டென்மார்க் தமிழர் கத்தோலிக்க ஒன்றியம்
டென்மார்க் தமிழர் கத்தோலிக்க ஒன்றியம் வழங்கும்
நத்தார் புதுவருட ஒளிவிழா

எதிர்வரும் டிசம்பர் மாதம், 17.12.94ல் கேர்ணிங் சுனேயா பாடசாலையில் நடைபெற உள்ளது.
இதில் நடனம், நாடகம், இன்னிசை, மேலைத்தேய நடனம், நாட்டுக்கூத்து போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளது.

நேரம்: 15.00 மணி.
பிரவேசம்: இலவசம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழர் கத்தோலிக்க ஒன்றியம்
டென்மார்க்.

❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄

# நத்தார் கொண்டாட்டம்

சனிக்கிழமை 10.12.94அன்று 13.00 – 17.00 மணி வரை
நத்தார் தாத்தா உட்பட மற்றும் பல வித நிகழ்ச்சிகள் இடம்பெறும்.
எல்லோரையும் பங்கு பற்றும் படி டெனிஸ் அகதிகள் உதவிச்சங்கம் அழைக்கின்றது!

# jule fest

Lørdag den 10.12 94 fra kl.13.00 til 17.00
Alle er velkomen både Børn og voksne
i Danskflygtningehjælps Aktivite huset,
Vestergade 41
Herning
Banko spil , julemand ......

# கற்பகம்

வெப்ப வலயத்தில் வளர்ந்து
வெயில் மழையில் நனைந்து
நிட்டையில் இருக்கும் முனிவன்
நிலையில் நான் நின்று
வட்டக் குடைபோல் வானில்
கட்ட வீடு மாந்தர்க்கு
கொட்டும் மழையில் நனையாது
கோடை வெயிலில் காயாது
குடியிருக்க ஓலை, மரம் கொடுத்துதவி
உணவு சமைக்க என்னுறுப்பு
தணலா எரிய விறகாகி
கஸ்டத்தில் வாழும் மனிதருக்கு
கனியும், கிழங்கும், கள்ளும்,
கருப்பனீரும் இன்னும் எத்தனையோ
முன்னூற்றுக்கு மேல்என்னில் பயனுண்டு.
இன்னூற்றாண்டிலும் எண்ணாதுள்ளான் மனிதன்
காலம் காலமாய் என் உடமை
கனிவுடன் பணிசெயவ்தே என்கடமை.
இஸ்டமாக என்னுடன் இணைபவர்க்கு
இனிய வாழ்வை ஏற்றுகிறேன்.
கேட்பதை எல்லாம் கொடுப்பதனால்
இத்தனைக்கும் மாந்தன் எனக்கு
இட்ட பெயர் கற்பகமாம்.

– எம். எஸ். க. –

*T.R.T. தங்காஸ்*

கேர்ணிங் மாநகரில் உங்களுக்குத் தேவையான ஆசிய நாட்டு மரக்கறி வகைகள், மீன் வகைகள், மற்றும் சகல விதமான மளிகைப் பொருட்களையும் குறைந்த விலையில், சிறந்த தரத்தில் வாங்குவதற்கு இன்றே நாடுங்கள்

*T.R.T. தங்காஸ்*
*Vester gade-24,*
*7400 Herning*
*T.P. & Fax 97 21 22 58*

www.padippakam.com


1.10.94ல் நடந்த பேச்சுத்திறன் போட்டியில் பரிசு பெற்றவர்களின் விபரம்:

பாலர் பிரிவு

| | | |
|---|---|---|
| 1வது இடம் | ஜனனி பரமேஸ்வரன் | Ikast |
| 2வது இடம் | டெனி ராம் | Ansager |
| 3வது இடம் | லக்சிகா லஞ்சன் | Herning |

ஆறுதல் பரிசுகளை பெற்றவர்கள் விபரம்:

| | |
|---|---|
| சியாத் மோகனகுமார் | Middelfart |
| மயூரன் வீதிவிடங்கன் | Ikast |
| சுவர்ணா தவலிங்கம் | Middelfart |
| சிலோகா தவலிங்கம் | Middelfart |
| ராஜி சிவஞானம் | Middelfart |

கீழ்ப் பிரிவு

| | | |
|---|---|---|
| 1வது இடம் | ராகுலன் இராசேந்திரா | Vesen |
| 2வது இடம் | டின்னா ராம் | Ansager |
| 3வது இடம் | சசிகுமார் சிவகுருநாதன் | Tram |

ஆறுதல் பரிசுகளை பெற்றவர்கள் விபரம்:

| | |
|---|---|
| சபிகலா குகனேஸ்வரன் | Skjern |
| கோமாசினி வடிவேலு | Middelfart |
| சர்மினி சிறிதரன் | Skjern |
| செல்வவதனி சிவகுருநாதன் | Tram |
| நிஷாந்தினி கதிர்காமலாஜா | Skjern |
| மதன் கதிர்காமராஜா | Skjern |
| கஜலக்சுமி சபாநாதன் | Herning |
| ரகுதாஸ் இராநேந்திரா | Vesen |
| ரூபினி திருச்செல்வம் | Skjern |
| பிரதீபன் பரஞ்சோதிநாதன் | Skjern |


படிப்பகம்

### மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| 1வது இடம் | ஞானேஸ்வரி துரை | Videbæk |
| 2வது இடம் | அனுரா வடிவேலு | Middelfart |
| 3வது இடம் | சுஜாந்தினி தங்கராசா | Middelfart |

ஆறுதல் பரிசுகளை பெற்றவர்கள் விபரம்:

| | |
|---|---|
| லோகேஸ்வரி துரை | Videbæk |
| சங்கீதா பரஞ்சோதிநாதன் | Skjern |
| ராஜ்குமார் தங்கராஜா | Middelfart |
| சபாநாதன் தவராஜா | Herning |
| கிரிஜா சற்குணம் | Horsens |
| தாட்சாகினி சபீந்திரன் | Horsens |
| ஜெயந்தன் மனோகரன் | Viborg |

### மேற்பிரிவு

| | | |
|---|---|---|
| 1வது இடம் | குணசுந்தரி துரை | Videbæk |
| 2வது இடம் | சிறிவாணி தியாகராஜா | Billund |
| 3வது இடம் | சுதாகரி துரை | Videbæk |

ஆறுதல் பரிசுகளை பெற்றவர் விபரம்:

| | |
|---|---|
| காயத்திரி மனோகரன் | Viborg |

❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄


## ராஜன் மணவறை

பிறந்தநாள் விழாவா? பூப்புனித நீராட்டு விழாவா? திருமண விழாவா? எந்த வகையான விழாக்களானாலும் கண்ணைக்கவரும் வண்ண மணவறைக்கு இன்றே நாடவேண்டிய

**ராஜன் மணவறை**
***Holsterbro vej-48***
***7400 Herning.***
***T.P.*** 97 21 69 65

# தமிழர் நிலை கண்டு

புரட்சிதாசன்

நெஞ்சு வெடிக்கவில்லையா ஈழத்தமிழ் நாட்டின்
நிலையை நினைக்கும் போது தமிழா உன் (நெஞ்சு)

அஞ்சியஞ்சி சாகும்மக்கள் அவனியில் எங்குமில்லை
பஞ்சமும் பசியும் பகைமையும் நமக்குள்
வஞ்சமும் சூழ்ச்சியும் வளருது நாளொருமேனியும்
துள்ளியெழுந்து நீ துணிந்து விட்டால் கொடுமைகள்
பஞ்சாய் பறக்குது பார் உன் கண்முன்னே (நெஞ்சு)

வகுத்து விட்டார் வருணங்கள் பலகோடி
வருத்தி விட்டார் மக்களைச்சாதியின் பெயர்சொல்லி
நகைக்குது உலகம் இந்இழி நிலைகேட்டு
அழித்து விட்டார் நாட்டின் பெருமை எல்லாம் (நெஞ்சு)

இரவிமுன் எழுந்து மாலைவரை வேலைசெய்து
கூலிகாணாமல் குடும்பம் நடத்தமுடியாமல்
கொடுமையினால் தொழிலாளி அனலாய்வேக
கொள்ளையடித்துச் சிலர் கொழுத்துவாழ கண்டுன் (நெஞ்சு)

புரட்சி புரட்சியென்று சொல்லிப் போகுது பாதை
பிழையாய் வகுத்துக் கொள்ளு சமதர்மப்பாதை
விரட்டி ஓட்டு வீணர்களை எல்லாம்
ஏற்றுநடந்து விட்டால் போற்றும் உனைக்கண்டு (நெஞ்சு)

இங்கு இயங்குது ஓர்புது உலகம் – இவர்
ஈழம் எமது நாடென்று கூறி
சங்கு ஊதுகிறார் தம்முள் பல பேதங்கள் கொண்டு
சந்திசிரிக்குதய்யா இவர்கள் அறியாமை கண்டு (நெஞ்சு)

ஈழத் தமிழினம் இன்புற்று வாழவழி காணேல்
தன்நலம் விட்டு பொது நலம் பேணில்ஓர்
அணிக்குள் திரண்டு பணியெனக் கொண்டால்
வாழத்தமிழினம் பெற்றிடும் நாடாம் ஈழத் திருநாடு (நெஞ்சு)

21ம் பக்கத்தொடர்ச்சி

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
முன் தோன்றிய மூத்த தமிழ்"
என்பதே சரியான கவிவடிவம் என்பது எனது கருத்து. கடலலைகள், கரைகளிலுள்ள பாறாங்கற்களில் மோதுகின்ற, காற்று மலைகளில் மோதுகின்ற இவ்வியற்கை நிகழ்வுகள் கல் தோன்றி மண் தோன்றுவதற்கு முன்பே நிகழ ஆரம்பித்து விட்டது என்பதும் உலகத்திலேயே முதன் முதலில் ஒலித்தது தமிழ் மொழியின் முதற் சொல்லான ஓம் என்ற சொல் தான் என்பதும் தெளிவாகின்றது. முதன் முதல் ஒலித்த தமிழ் மொழியை மூத்த தமிழ் என்று கூறுவதும் பொருத்தமானதே.

இது போன்று இன்னும் பலரின் கருத்துக்களை இனிவரும் கற்பகம் இதழ்களில் எதிர்பார்க்கிறேன்.

கற்பகம் வாசகர்கட்கு எனதன்பான வாழ்த்துக்கள்.

நன்றி.

தி.ஸ்ரீதரன்

❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄

எமது வருடாந்தக் கலாச்சார விழாவானது கடந்த 30 – 9 – 94 அன்றும் 01 – 10 – 94 அன்றும் நடைபெற்றது அனைவரும் அறிந்ததே. இவ்விழாவில் நடைபெற்ற ஓவியம், பேச்சு மற்றும் இதர போட்டிகளுக்கான பரிசில்களை வழங்கியவர்கள் விபரம் பின்வருமாறு:

1. T.R.T. தங்காஸ் ஸ்தாபனத்தினர்.
2. ராஜன் மணவறை ஸ்தாபனத்தினர்
3. துர்க்காஸ் வீடியோ மூவிஸ் ஸ்தாபனத்தினர்.
4. TULIP ஸ்தாபனத்தினர்.
5. திரு. பொன்னண்ணா.
6. திரு. ஆதவன்

ஆகியோராவர்.

மேற்கூறிய அனைவருக்கும் தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியமானது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

www.padippakam.com



Billederne fra Kultur festival 94 — 94ம் ஆண்டு கலை விழாவின் ஒரு பகுதி





www.padippakam.com



Billederne fra Kultur festival 94

94ம் ஆண்டு கலை விழாவின் ஒரு பகுதி








படிப்பகம்

www.padippakam.com

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

வினோஜன் சிவபாலசிங்கம்
Vinojan Sivabalasingam



20.11.94
2வது பிறந்தநாள்

தர்ஷன் தேவதாஸ்
Tharsan Thevathas



06.12.1994
4 வது பிறந்தநாள்

சுகீஷன் தேவதாஸ்
Suheeshan Thevathas



09.12.94
1வது பிறந்தநாள்

ஜெனதீகன் சிவராஜா
Janathikan Sivarajah



06.12.94
1வது பிறந்தநாள்

***Tillykke med Fødselsdagen***

படிப்பகம்

www.padippakam.com

CHANCHIVE

Tamilsk Dansk Venskabs
Forening
Danmarksgade 10
7500 Holstebro

நண்பர்களிற்கும்! வாசகர்களிற்கும்!!

எமது

# நத்தார் — புது வருட
# தைப் பொங்கல்

நல் வாழ்த்துக்கள்



# 1995



## God Jul og Godt Nyt År

**Tamilsk - Dansk Venskabsforening**
**தமிழ் – டெனிஸ் தோழமை ஒன்றியம்**
**Tamil - Danish Friendship Assosiation**

Porsvænget 7, 2 sal • 7400 Herning • Danmark • Tel. & Fax 97 12 55 93 • Giro no. 695-0892

படிப்பகம்